# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

Follow us:

மலர் : 03, இதழ்: 105 சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 30ஆம் திகதி புதன்கிழமை
(16.11.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் ஆகிர் - 21, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60


## கமெண்ட் கந்தர்...



நாட்டிலிருந்து ஆட்கள் கூடுதலா வெளியேறுறாங்கள் எண்டுதான் பாஸ்போர்ட் கட்டணங்களை கூட்டிட் டாங்கள் போல... சீப்பை ஒளிச்சா கலியாணத்தை நிப்பாட்ட லாமோ..?

## உஷ்



ஜனாதிபதி ரணிலை கடுமையாக விமர்சித்த சரத் பொன்சேகா கடந்த சில நாட்களாக அரசுக்கு ஆதரவாகப் பேசிவருகிறாராம்.

வெகு விரைவில் அவர் அரசுக்கு ஆதரவளித்து இணைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

# சர்வகட்சி அரசுக்கு இரகசியப் பேச்சு!

★ சு.க. எம்.பிக்களுடன் சந்திரிகா சந்திப்பு
★ ரணில் - சந்திரிகா நேற்றிரவு மந்திராலோசனை
★ மனோ - ஹக்கீம் ஜனாதிபதியுடன் கருத்துப்பரிமாற்றம்

(நா.தினுஷா)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்மார் மற்றும் எம்.பிக்களுடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இரகசிய சந்திப்பொன்றை நேற்று முன்தினம் இரவு கொழும்பில் மேற்கொண்டுள்ளார்.

முக்கியமான அரசியல் விடயங்கள் இந்த சந்திப்பின்போது ஆராயப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா...

02 பக்கம்

## 08 பில்லியனானது உலக சனத்தொகை

### 800 ஆவது கோடியாக்கிய குழந்தை இத்தாலியில் பிறந்தது

உலக சனத்தொகை 800 கோடியாக உயர்வடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை நேற்று (15) உத்தியோகபூர்வமாக அறிவித்தது. இந்த எண்ணிக்கையானது எதிர்வரும் 2030ஆம் ஆண்டில் மேலும் ஒன்றரை கோடியாக அதிகரிக்கும் என்றும் அவ்வமைப்பு எதிர்வு கூறியுள்ளது.

இது தொடர்பில் 52 பக்க அறிக்கையொன்றை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ளது.

இத்தாலியின்...

02 பக்கம்

## பொலிஸாருக்கு எதிராக 1,200 முறைப்பாடுகள்

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் பொலிஸாருக்கு எதிராக பொதுமக்களிடமிருந்து ...

02 பக்கம்

## அரச நிறுவனங்கள் தனியாருக்கு விற்பனை



### பட்ஜெட் தொடர்பில் தயாசிறி அதிருப்தி

(நா. தினுஷா)

அரச இலாபமீட்டும் நிறுவனங்களான ஸ்ரீலங்கா டெலிகொம் உள்ளிட்ட 13 நிறுவனங்களை தனியார் துறைக்கு விற்க 2023 ஆவது நிதியாண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தவறான செயற்பாடாகும்...

02 பக்கம்



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் உள்ளிட்ட 16 தரப்புகள் இணைந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு கோரி தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவாவுக்கு கடிதம் ஒன்றை நேற்று (15) கையளித்தனர்.

## பால்மாவுக்கு மீண்டும் தட்டுப்பாடு

நாட்டில் இறக்குமதி செய்யப்படும் பால்மாவிற்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளரின்...

02 பக்கம்

## பொருளாதார நெருக்கடி மேலும் உக்கிரமாகும்

### பாதீட்டை விமர்சிக்கிறார் கம்மன்பில



(நா. தினுஷா)

அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அடுத்த நிதியாண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் கடன் தொகை குறித்து குறிப்பிடப்படவில்லை. இந்த வரவு -செலவுத்திட்டத்துக்கமைய கணக்குப் பார்த்தால் அடுத்த வருடத்துக்கான மொத்தக் கடன் ஐந்து ட்ரில்லியன் ரூபாவாகும். இது தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையை மேலும் உக்கிரமடையச் செய்யுமென...

02 பக்கம்

## பெருந்தோட்ட மக்களின் மதிப்பும் உரிமையும் மறுக்கப்படுகின்றன

### பதுளையில் தொழிலாளியால் நடப்பட்ட 300 மரங்களை நிர்வாகம் அழித்ததாக வடிவேல் சுரேஷ் சபையில் குற்றச்சாட்டு

(நா.தினுஷா)

மடுல்சீம பிளான்டேஷனின் கீழ் இயங்குகின்ற எல்டொப் தோட்டத்தின் கிக்கிரிவத்த பிரதேசத்தில், பெண் தோட்டத்தொழிலாளி ஒருவரினால் நாட்டப்பட்ட 300 வாழைமரங்கள் குறித்த பெருந்தோட்டக் கம்பனியினால்...

02 பக்கம்

## இந்தியாவுக்கு கப்பல் சேவை விரைவில்

(யாழ். செய்தியாளர்)

இலங்கை - இந்திய பயணிகள் கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்குரிய பேச்சுவார்த்தைகள் இந்திய...

02 பக்கம்

## ரணிலின் பட்ஜெட்டை எதிர்த்து வாக்களிப்போம்



### விமல் எம்.பி. தெரிவிப்பு

(நா. தினுஷா)

பொருளாதாரத்தில் உணர்திறன் மிக்க பல்வேறு துறைகளை அந்நியப்படுத்தும் கொள்கைத் திட்டத்துக்கு அடியெடுத்து வைக்குமொரு ...

02 பக்கம்

## ஹிருணிகா உள்ளிட்ட 15 பேருக்குப் பிணை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 15 பேர் பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கறுவாத்தோட்ட பொலிஸாரினால் நேற்று முன்தினம் (14) கைதுசெய்யப்பட்ட நிலையில், அவர்களை நீதிமன்றம் நேற்று (15) பிணையில் விடுவித்தது.

இவர்களை தலா ஐந்து இலட்சம் ரூபா சீரப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் சந்தன அமரசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஐக்கிய மகளிர் படையணியினால், ஐக்கிய நாடுகள் சபையின் காரியாலயத்தின்...

02 பக்கம்

## இந்த வருட இறுதிக்குள் பலாலி விமான சேவை

### இராஜாங்க அமைச்சர் பிரேமலால் யாழில் உறுதி



(யாழ். செய்தியாளர்)

இந்த வருட இறுதிக்குள் பலாலி விமான நிலைய சேவை ஆரம்பிக்கப்படும் என துறைமுகங்கள்...

02 பக்கம்

## சுயாதீன ஆணைக்குழு நியமனங்கள் காலதாமதத்துக்குக் காரணமென்ன?

### சஜித்தின் குற்றச்சாட்டுக்கு சபாநாயகர் பதில்

(நா. தினுஷா)

சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்கும் செயற்பாடுகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் எந்த இடையூறும் ஏற்படவில்லை. ஒரு சில காரணங்களுக்காகவே இது தொடர்பான கலந்துரையாடல்கள் காலந்தாழ்த்தப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (15) நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

ஊடகங்கள் தன் மீது போலிக் குற்றச்சாட்டுகளை முன்வைப்பதாகவும் இதற்கு சபாநாயகர் நீதியான பதிலை வழங்க வேண்டும் என்றும்...

02 பக்கம்

## காகத்தின் கூட்டில் குயில் இட்ட முட்டையே பட்ஜெட்



### சபையில் ஹர்ஷ எம்.பி. சாடல்

காகத்தின் கூட்டில் குயில் முட்டையிட்டது போன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சரியான கொள்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது என்பது இந்த வரவு-செலவுத்திட்டத்தில் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை அடுத்த மார்ச் மாதத்துக்குள் நடத்த வேண்டும். அதே போன்று இந்தத் தேர்தலையும் நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்தினால் ஒரு சதம் செலவில்லாமல் நாடாளுமன்ற தேர்தலை நடத்த முடியும். எனவே...

02 பக்கம்

## பெருந்தோட்ட மக்களின்...

வெட்டி நாசப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின் வடிவேல் சுரேஷ், அனைத்து பிரச்சினைகளுக்கும் அப்பால் நாட்டுக்காகவே பெருந்தோட்ட மக்கள் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகிறார்கள். ஆனால், பெருந்தோட்ட மக்களுக்கான மதிப்பும் உரிமையும் அடிமட்டும் நாட்டில் மறுக்கப்படுகிறது. இது தேசிய குற்றம் என்றும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது நிலவும் வங்குரோத்து நிலையினால் மலையக பெருந்தோட்ட மக்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு இந்த வரவு-செலவுத்திட்டத்தில் நிவாரணம் கிடைக்குமென எதிர்பார்த்தோம். ஆனால், அவர்களுக்கான எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை. இது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

நாட்டுக்கு நல்ல சேவை கிடைக்கும்போது அதற்கு ஆதரவளிக்க நாங்கள் தயாராகவே இருக்கிறோம். அதேசந்தர்ப்பத்தில் ஏன்மலையக பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு எந்தத் தீர்வும் வழங்கப்படவில்லை. ஏன் வரவு-செலவுத்திட்டத்தில் மலையக மக்கள் மறுக்கப்பட்டார்கள். ஏன் அவர்கள் மறைக்கப்பட்டார்கள்.

மலையக காணி தொடர்பில் அனைவரும் பேசுகிறார்கள். ஆனால், அங்கிருக்கும் மரங்களையும் காணிகளையும பற்றி பேச மறக்காதவர்கள், அங்கு உயிரோடு வாழ்ந்துகொண்டிருக்கும் மலையக மக்கள் குறித்து பேச மறந்துவிட்டார்கள். அவர்களை உள்வாங்க மறந்துவிட்டார்கள் என்பது வேதனைக்குரியதாகும்.

ஹப்புத்தளை தேர்தல் தொகுதிக்குட்பட்ட கொஸ்லாந்தை, பூனாகலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் திருமதி பாப்பாத்தி யானை தாக்கி அகால மரணமடைந்துள்ளார். இந்தப் பகுதிகளில் யானை தொல்லை அதிகரித்துள்ள தால் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அதிகளவில் பாதித்துக்கொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் பாடசாலைக்கு செல்ல முடியாதவொரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட பிரிவினர் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

இது விவசாய நாடாகும். விவசாயிகளும் இருக்கிறார்கள். ஆனால், பெருந்தோட்டக் கம்பனிகளில் சில பகுதிகளில் 9 ஆயிரம் ஏக்கர் காணிகள் இன்று காடுகளாக்கப்பட்டுள்ளன. மறுபுறம் உணவுப் பற்றாக்குறை தொடர்பில் பேசிக்கொண்டிருக்கிறோம். மலையகத்தில் அனைத்து இயற்கை வளங்களும் இருக்கின்றன. ஆனால், அந்த வளங்கள் நிறைந்த 9 ஏக்கர் நிலங்கள் காடுகளாக்கப்பட்டுள்ளன.

நீங்கள் எவ்வாறு விவசாயம் பற்றி பேசுகிறீர்கள் என்று விளங்க முடியும். மடுல்சீமை பிளான்டேசனின் கீழ் இயங்குகின்ற எல்டொப் தோட்டத்தின் கிகிரிவத்த பிரதேசத்தில், பெண் தோட்டத் தொழிலாளி ஒருவரினால் நாட்டப்பட்ட முந்நூறு வாழை மரங்களை குறித்த பெருந்தோட்டக் கம்பனி வெட்டி நாசப்படுத்தியுள்ளது. இருநூறு வருடங்களுக்கு மேலாக வாழ்ந்துவரும் மலையக மக்களுக்கு வெறுமனே இருக்கும் நிலத்தில் விவசாயம் செய்யும் உரிமை இல்லையா? அதற்கென தனியான சட்டம் இருக்கிறதா?

சான்றுகளை சபைப்படுத்துகிறேன். இதுதொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இதுவா எமது நாட்டின் விவசாயம். பல்லாண்டுகளாக வாழ்ந்து, முதலீடு செய்து, ஆயுதங்கள் ஏந்தாமல், பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடாமல் அனைத்து சவால் மிக்க சந்தர்ப்பங்களிலும் நாட்டுக்காக வாழ்ந்தவர்கள் பெருந்தோட்ட மக்கள். அந்த மக்கள் வாழை மரம் நடுவதில் என்ன தவறு இருக்கிறது. பெருந்தோட்டங்கள் இளைஞர்களை விடுதலைப் புலிகளுடனோ, ஜே.வி.பியுடனோ இணையவிடவில்லை. எங்களின் கட்டுப்பாட்டிலேயே வைத்துக் கொண்டோம்.

அனைத்துக்கும் அப்பால் நாட்டுக்காகவே ஒன்றிணைந்து செயற்பட்டு வருகிறோம். ஆனால், பெருந்தோட்ட மக்களுக்கான மதிப்பும் உரிமையும் அடியோடு இந்த நாட்டில் மறுக்கப்படுகிறது. இது தேசிய குற்றமாகும் - என்றார்.

## பால்மாவுக்கு...

செயற்பாடுகளே இதற்குக் காரணமாகும் என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

உரியநேரத்தில் ஆவணங்களை கையளிக் காமை, கடன்னாணுப் பத்திரங்களை தாமதப்படுத் தியமை உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் காரணமாக, பால்மா அடங்கிய 15 கொள்கலன்கள் திருப்பி அனுப்பிவைக் கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், பயணாளர்களுக்கு தேவையான பால்மாவை ஒரே தடவையில் இறக்குமதி செய்து வழங்குவதில் சிக்கல் நிலை உள்ளதாகவும் பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

## ஹிருணிகா...

முன்னால் நேற்று காலை முன்னெடுக்கப்பட்ட வீதி நாடகத்தில் ஈடுபட்டிருந்த மூவர் கறுவாத்தோட்டப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை விடுவிக்கக் கோரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர உள்ளிட்ட சிலர் கறுவாத்தோட்ட பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் அமர்ந்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

இந்நிலையில், ஹிருணிகா உள்ளிட் டோர் தமது கடமைக்கு இடையூறு விளைவித்ததாக தெரிவித்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களை நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.



கிரித்தல, அவுகன புத்தர் சிலை வளாகத்தில் கோப்ரல் என்.ஈ.டீ.பி.நாணயக்காரவினால் கண்டெடுக்கப்பட்ட ஏழு இலட்சம் ரூபா மதிப்புள்ள வெளிநாட்டு நாணயத் தாள், மூன்று இலட்சம் ரூபா மதிப்புள்ள கெமரா, இரண்டு ஏ.ரி.எம். அட்டைகள் அடங்கிய பை, பெரு நாட்டைச் சேர்ந்த ஜாக்கலின் ஸ்லிண்டா என்ற உரிமையாளரிடம் இராணுவ பொலிஸ் படையணியின் தலைமை வளாகத்தில் கையளிக்கப்பட்டது.

## சர்வகட்சி...

சுதந்திரக் கட்சியை மறுசீரமைத்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு தயார்படுத்துவது குறித்தே இதில் ஆராயப்பட்டதாக சொல்லப்பட்டது. அதேசமயம், சர்வகட்சி அரசொன்றை அமைப்பது தொடர்பிலும் இங்கு விரிவாக பேசப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக சந்திரிகா குமாரதுங்க, நேற்றிரவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நீண்ட அரசியல் மந்திராலோசனைகளை நடத்திருப்பதாக தெரியவந்தது. நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை தீர்க்க சர்வகட்சி ஆட்சியொன்றை அமைப்பது குறித்து இருவரும் பேசியதாக மேலும் அறியவந்தது.

இதற்கிடையில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவுப் ஹக்கீம் ஆகியோர் ஜனாதிபதியின் அழைப்பின்பேரில் நேற்றிரவு அவரை சந்தித்தனர்.

இதன்போது தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

ஆட்சியை சிறந்த முறையில் முன்னெடுக்க தனக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு இதன்போது ஜனாதிபதி அவர்களிடம் கேட்டுக்கொண்டாரெனவும் அறியமுடிந்தது.

சர்வகட்சி ஆட்சியொன்று அமையுமானால் அது நாட்டின் தற்போதைய பிரச்சினைகள் தீர உறுதுணையாக இருக்குமென ஜனாதிபதி கருதுவதாக தெரிகிறது.

## பொலிஸாருக்கு...

சுமார் ஆயிரத்து 200 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகளை 1960 என்ற இலக்கத்தினூடாக முன்வைக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## காகத்தின் கூட்டில்...

ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் பிரகாரம் நாடாளுமன்றத்தைக் கலைத்து நாடாளுமன்றத் தேர்தலை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ த சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து அந்தப் பதவியில் இருக்கலாம். அதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால், தற்போதைய நாடாளுமன்றம் கலைய வேண்டும். ரணில் தலைமையிலான புதிய அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கும், ஒத்துழைக்கும் உறுப்பினர்கள் எதிர்த்தரப்பில் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வரவு-செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நேற்று அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதனது வரவு-செலவுத்திட்ட உரையில், திறந்த பொருளாதார முறை தொடர்பில் அநேகமான விடயங்களை பேசியிருந்தார். ஆனால், சமூக பாதுகாப்பு குறித்து ஒரேயொரு வார்த்தை மாத்திரமே பேசியிருந்தார். சமூக பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி பேசவில்லை. சமூக விருத்தி குறித்து கவனம் செலுத்தப்படவில்லை. இலஞ்ச, ஊழல் ஒழிப்பு குறித்து ஒரு வார்த்தை கூட பேசவில்லை. ஆகவே, ஊழலற்ற நாட்டை உருவாக்குவோம் என்பது பொய்யோ, கனவோ அல்ல என்பதை நேரடியாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

ஜனாதிபதி கூறும் இளையோர் சமூகம் இதனை ஏற்றுக்கொள்கிறது. இளைஞர்களின் சிறந்த எதிர்காலமே எமது வளம் என்ற ஜனாதிபதியின் கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அந்த வளத்தை சீரழித்தவர்களை விரட்டியடிக்குமாறு கோரியே கடந்த காலங்களில் நாட்டு மக்கள் போராடினார்கள். அவர்களுக்குத் தண்டனை வழங்குமாறும் கோரினார்கள்.

சிங்கப்பூரின் முதலாவது பிரதமர் லீ குவான் யூ தொடர்பில் பேசியிருந்தார். அவர் செய்த விடயங்களை இங்கும் செய்ய வேண்டும் என்று கூறியிருந்தார். ஆனால், லீ குவான் யூ சிங்கப்பூரிலிருந்த ஊழலை ஒழித்து விட்டே அவரின் புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார். ஆனால், ஊழலை இல்லாமலாக்குவது என்பது வைரஸை ஒழிப்பது போன்று என்று அவர் கூறவில்லை.

இலங்கையின் பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பில் முழு உலகமும் பேசுகிறது. பொருளாதாரக் குற்றவாளிகள் இலங்கையிலேயே இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். இருந்தபோதும், இந்த வேலைத்திட்டத்தினூடாக நாட்டைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் மறந்துபோய்விடும். இது கவலைக்குரிய விடயமாகும். பிரச்சினையின் வாலை பிடித்துக்கொண்டு நாங்கள் அல்ல. ஜனாதிபதியே பிரச்சினையின் வாலை பிடித்துள்ளார்.

மக்கள் எங்களிடமிருந்து பாதுகாப்பாக இருக்கவேண்டியதில்லை. ஜனாதிபதியிடமிருந்தே மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். ஊழலைப் பாதுகாக்கும் பயணம் என்று கூறினால் மாத்திரமே இந்தப் பிரச்சினையிலிருந்து நீங்கள் விடுபட்ட முடியும். அதுவே பிரச்சினை. ஊழல்வாதிகளை சுற்றி வைத்துக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு எந்த வாய்ப்பும் ஜனாதிபதிக்கு இல்லை - என்றார்.

## ரணிலின் பட்ஜெட்டை...

ஆரம்ப படியாகவே 2023ஆம் நிதியாண்டுக் கான வரவு-செலவுத்திட்டம் அமைந்துள்ளது. ஆகவே, இந்த வரவு-செலவுத்திட்டத்துக்கு எதிராகவே வாக்களிப்போம். மேலும், வரவு-செலவுத்திட்டத்தை தோற்கடிக்க முடியுமாக இருந்தால் அதற்கு முழுந்தளவு ஒத்துழைப்பை வழங்குவோம் என்று லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் தேசிய முன்னணியின் தலைவரு மாக விமல் வீரவங்ச எம்.பி. தெரிவித்தார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தை நம்பி பொருளாதார நெருக்கடி நிலைமைக்குத் தீர்வு காணும் மாற்று வழிகளை சீர்குலைத்துவிட வேண்டாம் என்றும் அவர் வேண்டுகோள் முன்வைத்தார்.

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அடுத்த நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் நேற்று (15) ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் எதிர்கால பயணம் எவ் வாறு இருக்கும் என்பதை 2023ஆம் நிதியாண் டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெளிவாக வெளிப்படுத்திவிட்டார். பொருளாதார நெருக் கடி என்ற போர்வையில் எமது மின்சக்தித்துறை உள்ளிட்ட பொருளாதாரத்தின் உணர்திறன் மிக்க பல்வேறு துறைகளை அந்நியப்படுத்தும் ஒரு கொள்கைத்திட்டத்துக்கு இந்த வரவு-செல வுத்திட்டத்தினூடாக அடியெடுத்து வைக்கப் பட்டுள்ளது.

அதனால், இந்த வரவு-செலவுத்திட்டத்துக்கு எதிராக வாக்களிக்கவுள்ளோம். அதுமாத்திர மன்றி இந்த வரவு-செலவுத்திட்டத்தை தோற் கடிக்க முடியுமாகஇருந்தால் அதற்காகவும் முழுந் தளவு ஒத்துழைப்பை வழங்க எதிர்பார்த்துள் ளோம்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 2.9 பில்லியன் டொலரே கிடைக்குமென எதிர் பார்க்கப்படுகின்றது. அந்தத் தொகையை யும் நான்கு தவணைகளாகவே வழங்குவார்கள். அதனூடாக கடன் மறுசீரமைப்பு சாதகமாக அமையும் என்று கூறமுடியாது.

அதனால், சர்வதேச நாணய நிதியத்தின் நிவாரணம் தொடர்பில் தேவையில்லாமல் நம்பிக்கை வைப்பதால், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான மாற்றுவழிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளார் - என்றார்.

## சுயாதீன ஆணைக்குழு...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று சபையில் கோரியதையடுத்தே சபாநாயகர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றுகையில், எதிர்க்கட்சித் தலைவரின் காலதாமதத்தால் சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் முழுமையாக தடைப்பட்டுள்ளதாக கடந்த வாரம் ஊடகமொன்று செய்தி வெளியிட் டிருந்தது. சபாநாயகர் தொடர்பில் இரு கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தோம். மிகவும் நீதியான முறையில் இந்தக் கலந்துரை யாடல்களுக்கு நாங்கள் எங்களின் ஒத்துழைப்பு களை வழங்கியிருந்தோம்.

21ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளித்தன் காரண மாகவே அரசியலமைப்புப் பேரவை ஸ்தாபிக் கப்பட்டது. எங்களின் ஆதரவு கிடைத்திருக் காவிட்டால் மூன்றிலிரண்டு பெரும்பான்மை யும் கிடைத்திருக்காது. சுயாதீன ஆணைக்குழுக் களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்காது.

எனவே, இந்த சுயாதீனக் குழுக்களின் செயற்பாடுகளை நான் காலந்தாழ்த்தினோ அல்லது செயற்பாட்டுக்கு தடங்கல் ஏற்படுத்தினோ என்பது தொடர்பில் சபாநாயகர் தெளிவுபடுத்த வேண்டும்.

அதேபோன்று, அரசியலமைப்புப் பேரவைக்கு எங்களின் தரப்பில் நாடாளுமன்ற உறுப் பினர் கபீர் ஹசீமை உறுப்பினராக நியமிக்க வும் தீர்மானித்துள்ளோம். இந்த நடவடிக்கை கள் தொடர்பான கலந்துரையாடல்களை இவ் வாரம்முதல் முன்னெடுப்பதற்கும் நீங்கள் அனுமதி வழங்கியிருந்தீர்கள். தேர்தலை நடத்த முயற்சிக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவாவை நீக்குவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகிறது. அதேபோன்று, மனித உரிமைகள் ஆணைக்குழுவின தலைவர் மாரசிங்கவையும் அந்தப் பதவியிலிருந்து நீக்கவும் அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

இந்த நோக்கங்களுக்காகவா இவ்வாறாக பொய் செய்திகள் வெளியிடப்படுகின்றன. எனவே, இதுதொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்க வேண்டும் என்று நான் கோருகிறேன்.

சுயாதீன, சுதந்திர ஊடகங்களுக்கு நாங்கள் ஆதரவளிக்கின்றோம். ஆனால், அரசியல் வாதிகளுக்கு சோரம் போகும் ஊடகங்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை - என்றார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன,

சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பான கலந்துரையாடல்களில் நானும் கலந்து கொண்டிருந்தேன். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் கலந்துகொண்டிருந்தார். இதன்போது, எதிர்க்கட்சித் தலைவரினால் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

ஒருசில காரணங்களுக்காகவே இதுதொடர் பான கலந்துரையாடல்கள் இந்த வாரத்துக்கு காலந்தாழ்த்தப்பட்டிருந்தன. அவ்வாறு எந்த சிக்கலும் ஏற்படவில்லை - என்றார்.

## பொருளாதார நெருக்கடி...

பிவித்துரு ஹெல உருமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (15) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக் கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகை யில்,

2023ஆம் நிதியாண்டுக்கான மொத்த கடன் தொடர்பில் வரவு-செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்படாவிட்டாலும், அடுத்த ஆண்டுக் கான கடன்தொகை தொடர்பில் கணக்கு பார்த்தால் கடனுக்கான ஒட்டுமொத்த தேவை 4 ஆயிரத்து 979 பில்லியன் ரூபாவாக வுள்ளது. சுருக்கமாகக் கூறுவதானால், அடுத்த வருடத்துக்கான மொத்த கடன் ஐந்து ட்ரில்லியன் ரூபாவாகவுள்ளது.

இந்த முறை வருமானத்துக்கு ஈடுகொடுக்கும் வகையில் செலவையும் திட்டமிட்டு கடன் பெறும் வரலாற்று குற்றத்தை நீ செய்திருப்பார் என்றே ஜனாதிபதியின் வரவு-செலவுத்திட்ட உரையை ஆற்ற ஆரம்பித்தபோது எண்ணினோம்.

ஆனால், ஏனைய நாட்களைவிட அரசாங் கத்தின் செலவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதனூடாக, தற்போதுள்ள பொரு ளாதார நெருக்கடியை மேலும் உக்கிரமடை யச்செய்யும் வேலைத்திட்டமே இந்த வரவு-செலவுத்திட்டத்தில் முன்னெடுக் கப்பட்டுள்ளது - என்றார்.

## இந்தியாவுக்கு...

அரசுடன் இடம்பெற்று வருகின்றதாக துறை முகங்கள் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று செவ்வாய்க் கிழமை விஜயம் மேற்கொண்டு, காங்கேசன் துறை துறைமுகத்தை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை - இந்தியாவுக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிப்பது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தப் பேச்சுவார்த்தையில் சாதகமான முடிவுகள் எட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் விரைவில் கப்பல் சேவையை ஆரம்பிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

துறைமுகத்துக்கு அருகில் சீமெந்து தொழிற்சாலை ஒன்று இயங்காத நிலையில் காணப்படுகின்றது. அதனை இயக்குவதன் மூலம் பொருளாதாரத்தை உயர்த்த முடியும்.

அதன்படி கைத்தொழில் அமைச்சு மற்றும் ஜனாதிபதியுடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி வெகு விரைவில் அதனை இயங்குவதற்குரிய நடவடிக்கையை எடுக்கவுள்ளோம்.

மேலும், வடக்குக்கான எரிபொருட்கள் தரை மார்க்கமாக பவுசர்களில் எடுத்து விடப்படுகின்றன. ஆனால், காங்கேசன்துறை துறைமுகம் மீள திறக்கப்படும் இடத்தில் கப்பல் களின் மூலம் எரிபொருளை கூட இலகுவாக கொழும்பிலிருந்து எடுத்து வர முடியும் - என தெரிவித்தார்.

## அரச நிறுவனங்கள்...

என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அடுத்த நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தொடர்பில், நேற்று (15) கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகை யில்,

மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தில், மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்படும் பிரதான நிறுவனமாக ரெலிகொம் நிறுவனம் இருக்கிறது. ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதிவரையான காலப்பகுதியில் வரிக்கு முன்னர் 11 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா (11.5 பில்லியன் ரூபா) வருமானத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. இவ்வாறு ஒவ்வொரு வருடமும் இந்த நிறுவனம் பாரிய வருமானத்தை ஈட்டி வருகிறது. ரெலிகொம் நிறுவனத்தினால் கடந்த வருடத்தில் மாத்திரம் 1.8 பில்லியன் ரூபா நிதி திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, திறைசேரிக்கு வருடாந்தம் தனது வருமானத்தில் 1.8 – 2 பில்லியன் ரூபா நிதியை திறைசேரிக்கு பெற்றுக்கொடுக்கும் நிறுவன மொன்றையே விற்பனை செய்ய முதலாவது நடவடிக்கையை எடுத்துள்ளார். அரசின் அதிக வருமானம் பெறும் நிறுவனத்தை விற்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இதனை நாங்கள் முழுமையாக எதிர்க்கிறோம். ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்துடன், இவ்வாறு இலாபமீட்டும் 13 நிறுவனங்கள் இருக்கின்றன. ஆனால், இந்த நிறுவனங்கள் பெறும் இலாபம் இங்கு குறிப்பிடப்படவில்லை.

அவ்வாறாயின் இந்த நிறுவனங்கள் பெறும் வருமானம் முழுவதையும் தனியார் நிறுவனங்களுக்கு விற்கவே இந்த சூழ்ச்சி மேற்கொள்ளப்படுகின்றது. இந்த வேலைத்திட்டம் முற்றிலும் தவறானதாகும் - என்றார்.

## இந்த வருட இறுதிக்குள்...

விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர யாழ்ப்பாணத்தில் நேற்று (15) தெரிவித்தார்.

காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் பலாலி சர்வதேச விமான நிலைய செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள துறைமுகங்கள் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் பலாலி விமான நிலையத்தை பார்வையிட்டதோடு அதிகாரிகளுடன் கலந்துரையாடினார் குறித்த விஜயத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டுக்கு பாரிய வருமானத்தை ஈட்டித்தந்த காங்கேசன்துறை துறைமுகம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அழிவடைந்து தற்போழுது பயன்பாட்டில் இல்லை. இவ்வாறான சம்பவங்கள் மூலமே எமது நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு நாங்கள் முகங்கொடுக்கவேண்டியுள்ளது.

அந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாங்கள் மீள வேண்டுமேயாக இருந்தால் காங்கேசன்துறை துறைமுகம் போன்ற பொருளாதாரத்தை ஈட்டக்கூடிய இடங்களை நாங்கள் மீள புதுப்பித்து அவற்றை செயல்படுத்துவதன் மூலமே நாட்டுக்கு வருமானம் கிடைக்கும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த வேலைத்திட்டத்தில் மிகவும் முமுமுரமாக ஈடுபட்டு வருகின்றார். அதன் காரணமாகவே இன்றைய தினம் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு நேரடியாக அமைச்சர் என்ற ரீதியில் நான் விஜயத்தினை மேற்கொண்டு இங்கே மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் மற்றும் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து இருக்கின்றேன்.

குறிப்பாக, இந்திய நாட்டின் உதவியையும் நாங்கள் கோரவுள்ளோம். ஏற்கனவே நாங்கள் இந்திய நாட்டின் உதவியுடன் சில வேலைத்திட்டங்களை இங்கே முன்னெடுத்து இருக்கின்றோம். ஆனால், இங்கே பல வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. அவ்வாறான வேலைத்திட்டங்களை விரைவில் ஆரம்பித்து மிக விரைவில் இந்த காங்கேசன்துறை துறைமுகத்தினை செயற்படுத்துவதற்கு நாங்கள் முனைகின்றோம்.

அதேபோல் பலாலி சர்வதேச விமான நிலையமும் நமக்கு ஒரு வருமானத்தை ஈட்டக்கூடிய ஒரு விமான நிலையமாகும். அந்த விமான நிலையமும் ஓரிரு மாதங்களில் விரைவில் செயற்படுத்தப்படும்.

குறிப்பாக, அமைச்சின் ஒருவர் இந்தியாதான் அந்த விமான நிலையத்தை செயல்படுத்துவதற்கு தடையாக இருப்பதாக கூறியதாக ஊடகவியலாளர் வினவியபோது, முதலில் அவ்வாறு பிரச்சினை இருந்தது. ஆனால், எல்லாம் பேசி சமரச முயற்சியில் ஈடுபட்டு தற்பொழுது எல்லா விடயங்களும் நிறைவடைந்துவிட்டன. ஓரிரு மாதங்களில் பலாலி விமான சேவையும் ஆரம்பிக்கப்படவுள்ளது. அவ்வாறு ஆரம்பித்தால் இலங்கையில் உள்ள மூவின மக்களும் குறிப்பாக, வடக்கு, கிழக்கில் உள்ள மக்களும் ஒன்றிணைந்து இந்த நாட்டில் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியும் என தெரிவித்தார்.

ஆனால், இவை விரைவில் சாத்தியப்பட வேண்டுமென இறைவனை பிரார்த்திப்பதாகவும் தெரிவித்தார்.

## 08 பில்லியனானது...

ரோம் நகரிலுள்ள சாண்டோ ஸ்பிரிட்டோ மருத்துவமனையில் வினியானா வானண்டே என்பவருக்கு கடந்த சனிக்கிழமை (12ஆம் திகதி) பிறந்த குழந்தையின் மூலமாக இந்த எண்ணிக்கையை (8 பில்லியனை) உலகம் எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மக்கள் தொகை 800 கோடி என்ற எண்ணிக்கையை எட்டிய அந்த குழந் தைக்கு லியோனார்டோ என்று பெயர் சூட்டப் பட்டுள்ளது.

2011 ஒக்டோபர் 31ஆம் திகதி உலக சனத்தொகை 700 கோடியாக அதிகரித்ததாக ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் அறிவித்திருந்தது.

உலக சனத்தொகை கடந்த 11 ஆண்டுகளில் மேலும் 100 கோடியினால் அதிகரித்துள்ளது. உலக சனத்தொகையைப் பொறுத்தவரையில் 55 வீதமானோர் ஆசிய பிராந்தியத்திலேயே வாழ்கின்றனர்.

ஆண்களின் சராசரி ஆயுட்காலம் 74 ஆண்டுகளாகவும் பெண்களின் சராசரி ஆயுட்காலம் 68 ஆகவும் ஐ.நா. அமைப்பினர் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அடுத்த வருடம் உலகில் ஆகக்கூடுதலான சனத்தொகையைக்கொண்ட நாடாக சீனாவைக் கடந்து இந்தியா முன்னேறும் எனவும் ஐ.நா மதிப்பிட்டுள்ளது.



# வடக்கு காணிகளை உறுதிப்படுத்துபவர்களுக்கு உதவத் தயாரென வடக்கு ஆளுநர் ஜீவன் அறிவிப்பு

யாழில் 2 ஆயிரத்து 749 பேரின் தனியார் காணிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில், எஞ்சியோர் தமது காணிகளை உறுதிப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு உதவுவதற்கு ஆளுநர் செயலகம் தயாராக இருப்பதாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் தனியார் காணிகள் தொடர்பில் அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் நில அமைச்சகம், நில ஆணையாளர் பொது அலுவலகம், நில அளவைத்துறை ஆகியவற்றின் கூட்டங்கள் மற்றும் நிலுவையில் உள்ள தற்போதைய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அனைத்துத் துறையினரையும் உள்ளடக்கி ஆராயப்படும்.

கொழும்பு காணி ஆணையாளர் அலுவலகம் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள் மற்றும் காணி அதிகாரிகளால் அனைத்து நில உரிமை கோருபவர்களையும் சந்தித்து, சம்பந்தப்பட்ட துறைகளுடன் தனிப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் ஆராயப்படும்.

தனியார் நில உரிமை கோரல்கள் அனைத்து மாவட்ட செயலாளர்கள் மாகாண நில ஆணையர், உரிமை தீர்வுப் பிரிவு, ஆளுநர் அலுவலகம் ஆகியவற்றுடன் இணைந்து உரிமை கோரப்பட்ட அனைத்து தனியார் நில உரிமையாளர்களின் தகவல்களையும் இவ்வருட இறுதிக்குள் மாவட்ட செயலாளர் முடிவுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

மாவட்ட செயலாளர்களால் நில உரிமை கோரல்களாக 4 ஆயிரத்து 4 பதிவுகள் சரிபார்க்கப்பட்ட நிலையில், 2 ஆயிரத்து 749 உரிமைகள் உறுதிசெய்யப்பட்டன. மேலும், வனவளத்துறையினரிடம் காணப்படும் நிலங்களை உரிய முறையில் அடையாளம் கண்டு பொதுப் பயன்பாட்டுக்கு பயன்படுத்துவதற்கு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலத்திரனியல் கொள்வனவு கொள்கை தயாரிப்பு தொடர்பில் விசேட கவனம்

## தேசிய பேரவை உப குழுவில் அவதானம்



இலத்திரனியல் கொள்வனவு கொள்கையை இந்நாட்டில் விரைவில் அறிமுகப்படுத்துவது தொடர்பில் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்காக தேசிய பேரவையின் உப குழுவில் கலந்துரையாடப்பட்டது.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்றத்தில் அண்மையில் கூடியபோதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் நிதி அமைச்சு, தொழில்நுட்ப அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் திணைக்களம் என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



நாட்டின் அனைத்து அரச நிறுவனங்களிலும் கொள்வனவு முறையை இலத்திரனியல் மூலம் மேற்கொள்வதன் தேவைக்கமைய நாடாளுமன்றம் ஊடாக கொள்கையொன்றை தயாரிப்பதன் அவசியம் தொடர்பில் உப குழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ இதன்போது சுட்டிக்காட்டினார். அதற்கமைய 2023ஆம் ஆண்டு ஜூன் மாதமளவில் கெபினட் அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கு இலத்திரனியல் கொள்வனவு முறையை அறிமுகப்படுத்தவும், 2025 அளவில் நாட்டின் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் இலத்திரனியல் கொள்வனவு முறையை அறிமுகப்படுத்தவும் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பவித்ரா வன்னியாரச்சி, விஜிர அபேவர்தன மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஐஸ் போதைப்பொருளை விநியோகம்; கல்முனையில் விசேட விசாரணைகள்

(பாரூக் ஷிஹான்)

கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை (13) இரவு மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வாழைச்சேனை நகரப்பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் இரு சந்தேக நபர்கள் கைதாகினர்.




இவ்வாறு கைதான நபர்கள் இருவரும் ஓட்டமாவடி பகுதியை சேர்ந்த 51 மற்றும் 36 வயது மதிக்கத்தக்கவர்கள் என்பதுடன், சந்தேக நபர்கள் வசமிருந்து ஐஸ் போதைப் பொருட்கள் முறையே 5 கிராம் 140 மில்லிகிராம் மற்றும் 9 கிராம் 340 மில்லி கிராம் உட்பட மோட்டார் சைக்கிள் ஒன்றும் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சோதனை நடவடிக்கையின்போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதி பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி.வேவிடவிதான ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்னாயக்க மேற்பார்வையில் உப பொலிஸ் பரிசோதகர் எச்.ஜி.பி.கே நிஸ்ஸங்க, பொலிஸ் சார்ஜன்ட் பண்டார (13443), பொலிஸ் கன்டபிள்களான பியுமஹ (94143), ஜயவர்தன (94155), நிமேஸ் (90699) ஆகிய அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபர்களைக் கைதுசெய்தனர்.

பின்னர் கைதுசெய்யப்பட்ட நபர்கள் உள்ளிட்ட சான்றுப் பொருட்களுடன் வாழைச்சேனை பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியதுடன், விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

# சவூதி அரேபிய வர்த்தகப் பிரதிநிதிகள் வெளிநாட்டமைச்சர் சப்ரியுடன் சந்திப்பு





இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான சாத்தியப்பாடுகளைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டுள்ள அஜ்லான் குழுமத்தின் துணைத் தலைவரும், சவூதி அரேபியாவிலுள்ள சவூதி சீன வர்த்தக சபையின் தலைவருமான ஷேக் மொஹமட் அல்-அஜ்லான், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் எம்.யூ.எம். அலி சப்ரியை கடந்த 13ஆம் திகதி அமைச்சில் வைத்து சந்தித்தார்.

இலங்கையின் பொருளாதார மீள்தன்மை, துறைமுக நகரம் மற்றும் விருந்தோம்பல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகிய துறைகளிலும் காணப்படுகின்ற சாத்தியமான முதலீட்டு வாய்ப்புகள் குறித்து அமைச்சர் சப்ரி அவருக்கு விளக்கினார்.

ஷேக் மொஹமட் இலங்கையில் நம்பிக்கைக்குரிய துறைகளில் முதலீடு செய்வதில் தனது விருப்பத்தை வெளிப்படுத்தியதுடன், இலங்கை அரசாங்கத்தின் ஆதரவையும் கோரினார். சவூதி அரேபியாவில் உள்ள சிறந்த மனை விற்பனை நிறுவனங்களில் ஒன்றான அஜ்லான் குழுமம், குடியிருப்பு, தொழில்துறை, வணிகம் மற்றும் சேமிப்புக் கிடங்கு இடங்களை அமைப்பதில் நிபுணத்துவம் பெற்றது. இந்நிறுவனம் 25 க்கும் மேற்பட்ட நாடுகளில் கணிசமான முதலீடுகளை செய்துள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய மற்றும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். சவூதி தூதுக்குழுவில் அஜ்லான் குழும தலைமை நிறைவேற்று அதிகாரி மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அரசியல் கைதியாக 27 வருடங்கள் இருக்கும் சகோதரனை விடுவியுங்கள்

## சகோதரி வாஹினி யாழில் கோரிக்கை




(யாழ்.நிருபர்)

இருபத்தேழு வருடங்களாக தமிழ் அரசியல் கைதியாக சிறையில் இருக்கின்ற எனது சகோதரனை விடுவிக்க வேண்டும் என அரசியல் கைதி விக்னேஸ்வரநாதன் பார்த்தீபனின் சகோதரி வாஹினி கோரிக்கை விடுத்ததுடன், சிறையில் அரசியல் கைதி என எவரும் இருக்கக் கூடாதென உருக்கமாகத் தெரிவித்தார். யாழ். ஊடக அமையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் அண்ணாவும் நானும் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். நீண்ட காலமாக "விடுதலை, விடுதலை" எனக்கூறி அந்த விடுதலை கிடைக்கவில்லை.

எதிர்வரும் பொங்கலுக்குள் அண்ணா வருவார் என்று நம்புகிறோம். அம்மா, அப்பா இல்லாத நேரத்தில் எங்களுடன் இணைந்து அண்ணா இருக்க வேண்டும் என விரும்புகிறேன்.

அண்ணா 18 வயதில் சிறைசென்று தற்போது 46 வயதாகிவிட்டது. அண்ணாவின் விடுதலையை எதிர்பார்த்து அம்மா உயிரிழந்துவிட்டார்.

அண்ணாவின் வாழ்க்கை சிறையில் முடிந்து விடாமல் அவரை பொது மன்னிப்பில் விடுதலை செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனைய அரசியல் கைதிகளும் பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

அதேவேளை, குறித்த ஊடக சந்திப்பில், அண்மையில் விடுதலையான தமிழ் அரசியல் கைதி வேலாயுதம் வரதராஜன் கருத்து தெரிவிக்கையில்,

23 வருட சிறைவாசத்தை அனுபவித்துவிட்டு ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை பெற்று வந்துள்ளேன்.

எனது குடும்பத்துடன் இணைந்து மகிழ்வாக இருக்கின்றேன். அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை.

எமது விடுதலையை சாத்தியப்படுத்திய ஜனாதிபதிக்கும் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவுக்கும் நன்றிகளை தெரியப்படுத்த விரும்புகிறேன். எமது விடுதலைக்காக இதயசுத்தியுடன் செயற்பட்ட ஒவ்வொரு அமைப்புக்கும் இவ்விடத்தில் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இறுதி அரசியல் கைதியை விடுதலை செய்யும் வரை இந்த விடயத்தை தொடர்ந்து முன்னெடுத்து அவர்கள் குடும்பத்ினருடன் இணைந்து மகிழ்வாக வாழ வழிசெய்ய வேண்டும்.

நீண்ட காலம் சிறையிலிருந்து வரும் கைதிகள் மிகவும் பின்தங்கிய, பூச்சிய நிலையிலேயே இருக்கின்றார்கள்.

அதனால் நமது சமூகத்தில் அக்கறை கொண்ட அமைப்புகள் விடுதலை பெற்று வந்தவர்கள் சமூகத்தில் வாழ்வை ஆரம்பித்து முன்கொண்டு செல்வதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கோரினார். அத்துடன், அண்மையில் விடுவிக்கப்பட 8 அரசியல் கைதிகளுக்கும் அமைப்பொன்றினால் உதவித்தொகை வழங்கப்பட்டது. அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

அதேவேளை 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் கருத்து தெரிவிக்கையில்,

சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் 33 பேர் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களையும் விரைந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# விவசாய எரிபொருள் விநியோகத்தை கண்காணிக்க அதிகாரிகள் நியமனம்

விவசாயத்திற்கான எரிபொருளை விநியோகிக்கும் செயற்பாடுகளுக்கான இணைப்பு நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்புகளுக்காக மேலதிக செயலாளர் ஒருவரின் தலைமையில் 02 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த செயற்பாடுகளின் மேற்பார்வைக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஏதேனும் ஒரு பிரதேசத்தில் அறுவடையின் போது அல்லது அறுவடையின் பின்னர் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு சிக்கல்கள் ஏற்படும் பட்சத்தில் மாவட்ட செயலாளர்களை சந்தித்து, அதற்கான தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.





முஸ்லிம் மீடியா போரத்தின் மாவட்ட இணைப்பாளர்கள் கூட்டம் மருதானை அல்சபா மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (13) நடைபெற்றது. இந்நிகழ்வில் மீடியா போரத்தின் தலைவி புர்ஹான் பீ.பி.இப்திகார், ஆலோசகர் என்.எம்.அமீன், செயலாளர் சிஹார் அனீஸ், பொருளாளர் ஜெம்ஸித், சிரேஷ்ட உறுப்பினர்களான எம்.ஏ.எம்.நிலாம், சட்டத்தரணி ரசீத் எம்.இம்தியாஸ், தாஹா எம்.முசம்மில் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# காணி சுவீகரிப்புக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டம்







தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில், முப்படைகளின் தேவைக்கு மக்களது காணிகளை சுவீகரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டம் நேற்று யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள வடமாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

இதில், எமது நிலம் எமக்கு வேண்டும், தமிழ் அதிகாரிகளே.. ஆளுநரது பதவிக்கு துணைபோகாதீர்கள், தமிழர்களின் நிலங்களே அபகரிக்காதே, ஐ.எம்.எப். கடன் பெறுவதற்கு நாடகமே, இனப்படுகொலை இராணுவமே.. தமிழர்களது நிலங்களை அபகரிக்காதே, ரணில் - ராஜபக்ஷ அரசே.. கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை நிறுத்து, வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திய வண்ணம் கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஊடகப்பேச்சாளர் சட்டத்தரணி க.சுபாஸ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.



# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, நவம்பர் 16ஆம் திகதி, புதன்கிழமை


## பட்ஜெட் சொல்வதென்ன?

நாட்டின் நிதி அமைச்சராக இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை முன்வைத்தார். கொரோனா, உள்நாட்டுப் பொருளாதாரம், மோசமான அரசியல் தீர்மானங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த நிவாரணங்களும் இல்லை. உழைக்கும் மக்களின் வாழ்க்கை நிலைமைகள் மீது மேலும் சுமைகளே சுமத்தப்பட்டுள்ளன.

இந்த வரவு-செலவுத் திட்டம், பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து மக்களின் சமூக நிலைமைகளை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டது என ரணில் அறிவித்தாலும் உண்மையில், சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) கட்டளைப்படி, அரசாங்கம் செயற்படுகிறது. இதன்மூலம் தொழிலாளர்கள் மற்றும் ஏழைகள் மீது பொருளாதார நெருக்கடியின் சுமைகளை திணிக்கின்றது.

2023 வரவு-செலவுத் திட்டம் பொருளாதார மீட்சி, அதனை ஸ்திரப்படுத்தியவாறு எவ்வாறு முன்னோக்கி நகர்த்துவது என்பது குறித்தே கவனம் செலுத்துகின்றது என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிகள் ஆரம்பித்ததில் இருந்து பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு உதவக்கூடிய நடுத்தர, நீண்டகால, பொருளாதார வளர்ச்சிக்கு உதவக்கூடிய குறுகிய கால நடவடிக்கைகள் குறித்தே கவனம் செலுத்தப்பட்டுவந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பின்பற்றப்பட்ட சில தவறான கொள்கைகள் காரணமாக பொருளாதாரம் மேலும் மோசமாக பாதிக்கப்படுவதை தவிர்ப்பதற்காக அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது என்று தெரிவித்துள்ள மத்திய வங்கி ஆளுநர், தாமதங்கள் மீட்பு நடவடிக்கையை பாதிக்கலாம் எனவும் அதிகரிக்கும் பணவீக்கத்தை கட்டுப்படுத்தவேண்டும் - குறைக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியின் ஆரம்ப நாட்களில் நீண்டவரிசைகள், பலமணிநேர மின்வெட்டு போன்றன காணப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ள மத்திய வங்கி ஆளுநர், பொருளாதாரம் வீழ்ச்சியடைவதை தடுப்பதற்காக சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிலையேற்பட்டது. வேறு தெரிவுகள் இருக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாணயக்கொள்கையை இறுக்கமாக்கியிருக்காவிட்டால், வட்டி மற்றும் வரிகள் போன்றவற்றை அதிகரித்திருக்காவிட்டால், பணவீக்கம் 100 வீதத்திற்கும் அதிகமானதாக காணப்பட்டிருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணிலின் ஒட்டுமொத்த பட்ஜெட் உரையை பார்க்கும்போது மக்களுக்கு அந்த பட்ஜெட் வெறும் பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்ட ஒன்றாகவே இருக்கிறது. உள்நாட்டு நிலைமைகளால் விசனப்பட்டு வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவரும் சூழ்நிலையில், ரணிலின் இந்த பட்ஜெட் அதற்கு எந்த தீர்வையையும் தந்ததாக தெரியவில்லை. அதேபோல் அதிகரித்துவரும் விலைவாசிக்கு ஏற்ப பொருட்களின் விலைக்குறைப்போ அல்லது அதற்கு ஏற்றவாறான நிவாரணங்களோ அறிவிக்கப்படவில்லை.

வருமானத்தை கூட்டும் வகையில் வரிகளை அதிகரிக்க ஆலோசனை தெரிவித்துள்ளார் ரணில். அரச வருமானங்கள் அதிகரிப்பு என்றாலே அதுவும் மக்கள் மீது சுமையொன்றை கொண்டுவரப்போகிறது என்றுதானே அர்த்தம். சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுக்கு ஏற்ற வகையில் செயற்படப்போனால் எதிர்காலத்தில் பல விளைவுகள் வருமென இப்போதே கட்டியம் கூறிவிடலாம். கிரீஸ் பொருளாதார நெருக்கடியில் இருந்தபோது அங்கு ஓய்வூதியம் நிறுத்தப்பட்டது. அரச ஊழியர்களின் சம்பளம் கூட அரைவாசியாக குறைக்கப்பட்டமை இங்கு நினைவில் கொள்ளப்படவேண்டும்.

நிதியமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வரவு-செலவுத் திட்ட உரையில் காணப்படுகின்ற, தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் கொழும்பு மாநகர பாமர மக்கள் தொடர்பிலான அலட்சியப்போக்கு ஏமாற்றமடைய செய்துள்ளது. இதனை கொழும்பு மாவட்ட எம்.பியும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் ஜனாதிபதியிடம் நேரடியாகவே சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில் இந்த வரவு-செலவுத் திட்டத்தை பொறுத்தவரை ரணிலுக்கு இதுவொரு சமாளிப்பு பட்ஜெட். பாதுகாப்புப் படைகள் குறித்து அவர் கூடுதல் கரிசனை செலுத்தியிருப்பது அவர்களில் தங்கியே தனது இந்த பதவிக்காலத்தை ஓட்டவேண்டும் என்ற விடயத்தைக் காட்டி நிற்கிறது.

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப பெரிதும் உதவி புரியும் என்று எல்லோராலும் சொல்லப்பட்ட கொழும்பு போர்ட் சிட்டி திட்டத்தை பற்றியோ அல்லது அதன் முதலீடுகளால் வரும் வருமானத்தை பற்றியோ ஜனாதிபதி ரணில் தனது உரையில் குறிப்பிடவில்லை. நாடு இப்போதுள்ள நிலையில், அதைப்பற்றி பேசப்போய் இந்தியாவின் அதிருப்தியை சம்பாதித்துக் கொள்ளக்கூடாதென ஜனாதிபதி நினைத்திருக்கக் கூடும்.

பட்ஜெட்டில் துண்டுவிழும் தொகை 2,404 பில்லியன் ரூபா. இந்தப் பற்றாக்குறையை அரசாங்கம், உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்களின் மூலமாக, நிவர்த்தி செய்யக் கூடிய நிலை தற்போது இருப்பதாகத் தெரியவில்லை. இந்தப் பேரளவு கடனை வழங்கக் கூடிய நிலை உள்நாட்டு கடன் வழங்குநர்களிடம் கிடையாது. வெளிநாடுகளிடம் கடனைத் திரட்டக் கூடிய வாய்ப்புகளும் அரிது. உள்நாட்டு வங்கிகளிடம் இருந்து அரசாங்கம் கடன்களைத் திரட்டிக் கொள்ள முனைந்தால், நாட்டின் வங்கிக் கட்டமைப்பு கூட சீர்குலையும் நிலை ஏற்படலாம். இந்நிலையில், அரசாங்கத்திடம் உள்ள முக்கியமான வழிமூலம், நாணயத் தாள்களை அச்சிடுவது மட்டும்தான்.

ஏற்கனவே கடந்த பல மாதங்களாக, நாணயத் தாள்களை அச்சிட்டே அரசாங்கம் நிதி நெருக்கடியைச் சமாளித்து வந்திருக்கிறது. இந்தநிலையில் மீண்டும் நாணயத் தாள்களை அச்சிடும்போது, பணவீக்கம் மோசமாக அதிகரிக்கும். எவ்வாறாயினும் பணவீக்கம் அதிகரித்து வரும் நிலையில், அரசாங்கத்தின் தற்போதைய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு கூட, சரியானதாக இருக்கும் என்று கருத முடியாது. ஏனென்றால், பணவீக்கம் அதிகரிக்க அதிகரிக்க, செலவினங்கள் அதிகரிக்கும்.

எனவே வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார நெருக்கடிகளுக்கும் தீர்வை எதிர்பார்த்து விட முடியாது என்றாலும் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்திய காரணிகளைக் கண்டறிந்து, அதனை தீர்ப்பதற்காக வழிமுறைகளை அவசரமாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. ரணில் விக்கிரமசிங்க அடிப்படைச் சீர்திருத்தங்களை விரைவாக முன்னெடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார். ஆனால், அரசதுறையின் வினைத்திறனின்மையும், வருமானத்தை உறுதிப்படுத்தும் பொறிமுறைக் குறைபாடுகளும், அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளாக உள்ளன.

மிகையான பணியாளர்கள் எண்ணிக்கை முக்கியமொனதொரு பிரச்சினை. மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள், அரசபணிக்கு ஆட்களை சேர்ப்பதாக கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற, அரச அலுவலகங்களில் பெருமளவில் நியமனங்கள் வழங்கப்பட்டன. அரசதுறை பின்னடைவுக்கு முக்கிய காரணம், மிகையான ஊழியர்களும், அதிகளவு சம்பளம் மற்றும் சலுகைகளும்தான்.

அரசாங்கத்துக்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை சரியாக அறவிடக் கூடிய பொறிமுறையை உருவாக்குவதற்கும், வீண் விரயங்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் நேரம் காலம் பார்க்க வேண்டியதில்லை. இந்த விடயத்தில் கடும் போக்கில் செயற்படக் கூடிய அரசாங்கத்தினால்தான் நெருக்கடியை சமாளிக்க முடியும். இதனைச் செய்யாமல், பொருளாதாரத்தை சரிப்படுத்த முடியாது. வரவு-செலவுத் திட்டத்தின் இலக்குகளையும் அடைய முடியாது.

# உரிய காலத்தில் தேர்தல்களை நடத்துவதே அரசியல் ஸ்திரத்துக்கான ஜனநாயகப் பாதை

## பாதுகாப்பை மையமாகக் கொண்ட அரசாங்கத்தின் அணுகுமுறை நீண்டகால நோக்கில் எதிர்விளைவுகளைக் கொண்டுவரும்

ஏனைய சகல துறைகளுக்கும் செலவினங்கள் குறைக்கப்படுகின்ற ஒரு நேரத்தில் பாதுகாப்புத்துறைக்கு பட்ஜெட்டில் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றமை அதிகாரத்தை இறுகப்பிடித்து அரசியல் உறுதிப்பாட்டு தோற்றத்தை காண்பிப்பதற்கு அரசாங்கம் பாதுகாப்புப் படைகள் மீது எந்தளவுக்கு தங்கியிருக்கிறது என்பதை வெளிக்காட்டுகிறது. மோசமான நிலைமை இனிமேல்தான் வரப்போகிறது என்ற அரசாங்கத்தின் பயத்தையும் இது பிரதிபலிக்கிறது. முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியில் இருந்து விரைவில் நாடு விடுபடும் என்று நம்பிக்கொண்டிருக்கும் மக்களைப் பொறுத்தவரை இது தீமைக்கான அறிகுறியேயாகும்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவிக்கு வந்ததமை தொடர்பில் எழுந்த நியாயப்பாட்டு கேள்விகளுக்கு அப்பால், அவரின் வருகை அவருக்கு சர்வதேச முறைமைகளுடன் இருக்கும் பரிச்சயத்தின் ஊடாக சர்வதேச ஆதரவைப் பெற்று அரசியல் உறுதிப்பாட்டைக் கொண்டுவருவதற்கு உதவும் என்ற எதிர்பார்ப்புடன் வரவேற்கப்பட்டது. இந்த எதிர்பார்ப்பு இன்னமும் நிறைவேறவில்லை. நாட்டுக்கு இறுதியாக கிடைத்த பெருமளவு உதவி இந்தியாவிடம் இருந்தே வந்தது. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்பதற்கு முன்னர்தான் இது நடந்தது.

நாட்டுக்கு தேவைப்படும் கடனுதவியை சர்வதேச நாணய நிதியம் வழங்கும் என்றே தற்போது நம்பிக்கை வைக்கப்படுகிறது. அவ்வாறு கிடைக்கக்கூடிய கடனுதவி இவ்வருடம் மார்ச் மாதம் கடன் தீர்க்க வக்கில்லாத நிலை பிரகடனப்படுத்தப்பட்ட பிறகு தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் இலங்கையுடன் மீண்டும் அலுவல்களை ஆரம்பிக்க கடன் வழங்கும் நிறுவனங்களுக்கும் ஒரு பச்சை விளக்காக அமையும். சர்வதேச நாணய நிதியத்தினால் நிர்ணயிக்கப்பட்ட பொருளாதார இலக்குகளை பிரதிபலிப்பதாக பட்ஜெட் அமையும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிப்படையாகவே கூறினார்.

இதுவரையில் இறுக்கமான இரகசியமாக இருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் யோசனைகளை பகிரங்கப்படுத்துவதாகவும் ஜனாதிபதி உறுதியளித்திருக்கிறார். அந்த யோசனைகள் பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத் தரம் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்து கடுமையான சந்தேகங்கள் பொதுவெளியில் கிளம்பியிருந்தன. சர்வதேச நாணய நிதியத்தின் யோசனைகள் பொதுமக்களிடம் வேண்டி நிற்கும் தியாகம் தொடர்பில் மூளக்கூடிய கோபம் ஜனாதிபதிக்கு எதிராக திருப்பிவிடப்படக்கூடும். தங்களுக்கு வாய்ப்பு கிடைத்தால் நாட்டு மக்களை சிறப்பாக பாதுகாக்க முடியும் என்று அரசாங்கத்திலும் எதிர்க்கட்சியிலும் உள்ள (ஆட்சிக்கு வரும் ஆர்வம்கொண்ட) தலைவர்கள் கூறிவருகிறார்கள்.

இத்தகைய பின்புலத்தில், பொருளாதார சீர்திருத்தங்கள் மீதான எதிர்ப்பை மக்கள் தேர்தல்களின் மூலமாகவோ அல்லது ஆர்ப்பாட்டங்கள் மூலமாகவோ காட்டுவதை ஜனாதிபதியும் அவரது குழுவினரும் விரும்பமாட்டார்கள். உள்ளூராட்சி சபைகளின் வட்டாரங்களின் எல்லைகளை வரையறை செய்வதற்கும் உள்ளூராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கைய அரைவாசியாக குறைப்பதற்கும் தேசிய எல்லை நிர்ணய குழு திடீரென்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு செலவுகளை குறைக்கும் நடவடிக்கையாக இதை அரசாங்கம் கூறுகிறது. இது அடுத்த வருடம் மார்ச் மாதம் நடத்தப்படவேண்டியிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவதற்கு வழிவகுக்கக்கூடிய தந்திரோபாயமாகவும் நோக்கப்படலாம். அவ்வாறு ஒத்திவைக்கப்பட்டால் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் அபிப்பிராயம் தெரிவிக்கக்கூடிய வாய்ப்பை அது இல்லாமல் செய்யும். சுகாதாரத்துறைக்கும் கல்வித்துறைக்கும் ஒதுக்கப்பட்ட நிதியையும் விட கூடுதலானதாக இருக்கும் பாதுகாப்பு பட்ஜெட் அரசாங்கத்துக்கு எதிரான எந்தக் கிளர்ச்சியையும் ஒடுக்குவதற்கு பாதுகாப்புப் படைகள் ஊக்கம் பெறுவதை உறுதிசெய்யும் எனலாம்.

### நியாயப்பாட்டு நெருக்கடி

இவ்வருடம் பொருளாதாரம் வீழ்ச்சியடையத் தொடங்கி மக்கள் வீதிகளில் இறங்கி போராடத் தொடங்கிய நேரத்திலிருந்து அரசாங்கம் அதன் நியாயப்பாடு தொடர்பிலான நெருக்கடியொன்றை எதிர்நோக்கிவருகின்றது. அந்த நெருக்கடியை அரசாங்கத்தினால் அலட்சியம் செய்ய இயலாது. இவ்வருடம் மே மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவையின் பதவி விலகல் அரசாங்கத்தை பெரும் பீதிக்குள்ளாக்கி பாதுகாப்பற்ற ஒரு உணர்வைக் கொடுத்திருக்கிறது. இரு மாணவர் தலைவர்களை விடுதலை செய்யக்கோரி பதாகைகளை ஏந்திய வண்ணம் வீதிப்போராட்டத்தில் ஈடுபட்ட இரு பெண்கள் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட சம்பவம் அரசாங்கத்தின் இந்த பாதுகாப்பின்மையின் ஓர் அறிகுறியாகும்.

இவ்விரு பெண்களுக்கும் எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருந்திருக்கிறது. பெரும் எண்ணிக்கையான பொலிஸார் பெண்களை சுற்றிவளைத்து வாகனத்தில் பலவந்தமாக ஏற்றியதை காணக்கூடியதாக இருந்தது. இந்த களேபரத்தில் பொலிஸ் அதிகாரிகள் பெண் பொலிஸாரை கழுத்தில் பிடித்து கொடூரமாக நடத்தியதை சமூக ஊடகங்களில் வெளியான பதிவுகளில் காணமுடிந்தது. அந்த பொலிஸ் அதிகாரிகள் ஏன் இவ்வாறு நடந்துகொண்டார்கள் என பார்த்துக்கொண்டிருந்த எவருக்குமே விளங்கவில்லை.

அரசாங்கம் அதன் நடவடிக்கைகளை மற்றவர்கள் எவ்வாறு நோக்குவார்கள் என்பதைப் பற்றி எந்த யோசனையும் இல்லாமல் பாதுகாப்பு அக்கறைகளில் மூழ்கியிருக்கிறது. இது நாட்டையும் அரசாங்கத்தையும் பொறுத்தவரை துரதிர்ஷ்டவசமானது. இரு மாணவர் தலைவர்களை எந்த குற்றச்சாட்டும் சுமத்தாமல் பயங்கரவ தடைச்சட்டத்தின் கீழ் மூன்று மாதங்களுக்கும் கூடுலாக தடுத்துவைத்திருக்கும் அரசாங்கத்தின் செயல் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களை மாத்திரமல்ல, நியாயமாக சிந்திக்கக்கூடிய எவரையும் கடும் சீற்றத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

அரசாங்கத்தின் இந்த செயல் பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்பைக் கொண்டுவரக்கூடியதாகும். இலங்கையின் ஏற்றுமதியாளர்களுக்கு பெரும் பயனுடையதாக இருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை நீடிப்பதா இல்லையா என்பது அடுததவருடம் மீளாய்வுக்கு உட்படுத்தப்படவிருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியம் அந்த சலுகையை நீடிப்பது இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரத்தை பொறுத்ததேயாகும். இலங்கையில் கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களும் தற்போது தொடருகின்ற மனித உரிமை மீறல்களும் ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்றத்திலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச அரங்குகளிலும் விவாதத்துக்கு எடுக்கப்படுகின்றன. இது நாட்டுக்கு பெரும் பாதிப்பைக் கொண்டுவரும்.

இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொருளாதார நிலைவரம் குறித்து கடந்த வாரம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் மக்கள் சபையில் (House of Commons) நடைபெற்ற விவாதத்தின்போது நாட்டில் தொடரும் மனித உரிமை மீறல்கள் குறித்து பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினார்கள். இலங்கை மீது சில வகையான தடைகளை கொண்டுவரவேண்டும் என்று கோரிய அவர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கை விவகாரத்தை பாரப்படுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைக்கான கடப்பாடுகளை நிறைவேற்றவேண்டும் என்றும் இராணுவச் செலவினங்களைக் குறைக்கவேண்டும் என்றும் இலங்கை அரசாங்கத்திடம் அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். மனித உரிமை மீறல்களுக்கு எதிரான ஒரு புதிய தலைமுறை தடைகள் திட்டமான 'உலகளாவிய மக்னிட்ஸ்கி' சட்டத்தை இலங்கைக்கு பிரயோகிக்கவேண்டும் என்று ஓர் உறுப்பினர் யோசனை முன்வைத்தார். இந்த சட்டம் தனிப்பட்ட நாடுகளை இலக்குவைத்து விதிக்கப்படுகின்ற பாரம்பரிய தடைகளுக்கு மாறாக, உலகம் பூராவும் குற்றமிழைத்தவர்களுக்கு அவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் எளிதாக பிரயோகிக்கக்கூடியதாகும்.

### இராணுவ வரையறை

பாதுகாப்பை மையமாகக் கொண்ட அரசாங்கத்தின் அணுகுமுறை நீண்டகால நோக்கில் எதிர்விளைவுகளைக் கொண்டுவரப்போகிறது என்பது கவலை தருகிறது. அந்த அணுகுமுறையினால் நெருக்கடியின் அறிகுறிகளை தற்போதைக்கு மாத்திரம் அடக்கிவைக்கமுடியும். மனிதாபிமான விவகாரங்கள் ஒருங்கிணைப்புக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினால் "இலங்கை - பல்பரிமாண நெருக்கடி - மனிதாபிமான தேவைகளும் முன்னுரிமைகளும் - ஜூன் / டிசம்பர் 2022" என்ற தலைப்பில் அறிக்கையொன்று தற்போது வெளியிடப்பட்டிருக்கிறது.

ஒரு கோடியே 35 இலட்சம் மக்கள்தொகையில் 61.1 சதவீதமானோர் உணவுத் தட்டுப்பாடு காரணமாக சமாளிப்பு யுக்திகளை கையாள்வதாகவும் 47.7 சதவீதமான குடும்பங்கள் வாழ்வாதாரத்தை சமாளிக்கும் யுக்திகளை கையாள்வதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.


8 நவம்பர் 2022 வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் "சுமார் 53 இலட்சம் மக்கள்தொகையில் 24 சதவீதமானோர் தங்களது உணவு வேளைகளை குறைத்திருக்கிறார்கள். மக்கள்தொகையில் அதே சதவீதத்தினரில் வயதுவந்தவர்கள் பிள்ளைகள் சாப்பிடவேண்டும் என்பதற்காக தங்களது உணவைக் குறைக்கின்றார்கள். குடும்பத்தில் பெண்களே இறுதியாக சாப்பிடுகிறார்கள். 2021 இறுதிப்பகுதியுடன் ஒப்பிடும்போது ஏற்றுக்கொள்ளமுடியாத உணவுவகைகளை சாப்பிடும் குடும்பங்களின் விகிதம் பத்து மடங்கு அதிகரித்திருக்கிறது" என்று கூறுகிறது. உண்மையில் மக்கள் பட்டினி கிடக்கிறார்கள் என்பதையே இது காட்டுகிறது.

தேர்தல்கள் பிற்போடப்பட்டு தங்களது நம்பிக்கைக்குரியவர்களை மக்கள் தெரிவுசெய்யமுடியாமல் போகும் பட்சத்தில், தாங்கள் அனுபவிக்கும் இடர்ப்பாடுகளுக்கு எதிராக மக்கள் வீதியால் இறங்கி போராடவே செய்வர். விலைவாசி உயர்ந்து, எரிபொருட்களும் பசளை வகைகளும் கிடைக்காத நிலையில், தினமும் அரைவாசி நேரம் மின்வெட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டபோது மக்கள் கிளர்ந்தெழுந்து 'அரகலய' போராட்டம் மூண்டது. அதேபோன்ற விரக்தியான ஒரு கட்டம் மீண்டும் தோன்றி மக்கள் கிளர்ந்தெழுவார்களேயானால், பாதுகாப்புப் படைகளினால் அதை அடக்க இயலும் என்று எதிர்பார்க்கமுடியாது.

நியாயபூர்வமான போராட்டங்களை ஒடுக்குவதை விடுத்து, மக்களின் தேவைகளை நிறைவேற்ற அரசாங்கம் கிடைப்பதற்கு அரிதான அதன் வளங்களை ஒதுக்குவதே தற்போதைய தருணத்தின் பிரதான தேவையாகும். மறுபுறத்தில், அரசாங்கம் மக்களை அடக்கி எதிர்காலத்தில் கிளர்ச்சிகள் மூளாமல் இருப்பதை தடுப்பதற்கு பாதுகாப்புப் படைகளில் தங்கியிருக்கிறது என்றே தோன்றுகிறது.

கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய உரையொன்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆயுதப்படைகள் மீது அரசாங்கம் ஏன் இந்தளவு கூடுதல் கவனத்தைக் குவிக்கிறது மற்றும் பாதுகாப்பில் ஏன் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது என்று கேள்விகள் கிளம்பலாம் என்பதை ஏற்றுக்கொண்டார். "நாம் பிறந்தபோது இந்து சமுத்திரத்தில் எந்தத் தகராறும் இருக்கவில்லை. ஒரு கட்டத்தில் இந்து சமுத்திரம் ஒருவருக்கும் தேவைப்படவில்லை. இன்று அவ்வாறில்லை. நாம் தப்பிப் பிழைக்கவேண்டும் என்றால் ஆற்றல்கள், பாதுகாப்பு ஆற்றல்கள், மூலோபாய ஆற்றல்கள் என எல்லாவற்றையும் பயன்படுத்தவேண்டியிருக்கும்" என்று ஜனாதிபதி தனதுரையில் குறிப்பிட்டதாக செய்திகள் வெளியாகின.

"கடல் போக்குவரத்து சுதந்திரம் இல்லையென்றால் நாடு ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட தொழில்துறையைக் கொண்டிருக்க முடியாது" என்று ஜனாதிபதி தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. இந்த பதில் நம்பும்படியாக இல்லை. ஏனென்றால், பிரிட்டிஷ் அல்லது பிரெஞ்சு இராணுவங்களை விடவும் கூடுதல் எண்ணிக்கையில் இருக்கும் இராணுவத்தை பேணுவதற்கு பாதுகாப்பு பட்ஜெட்டின் பெரும்பகுதி போகிறது. மக்களை தவறாக வழிநடத்திய இந்த வகையான கூற்றுகளும் நியாயப்படுத்தல்களுமே சுதந்திரம் பெற்று 74 வருடங்களுக்கு பிறகு நாட்டை இன்றைய நிலைக்கு கொண்டுவந்தன. உரிய நேரத்தில் தேர்தல்களை நடத்தி அதன் மூலம் தெரிவாகின்ற அரசியல் பிரதிநிதிகளுடன் அடுத்து முன்னெடுக்கவேண்டிய திட்டங்கள் குறித்துப் பேச்சு நடத்துவதே பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான நிலைபேறான அரசியல் உறுதிப்பாட்டை அடைவதற்கான ஜனநாயகப் பாதையாகும்.



கலாநிதி ஜெகான் பெரேரா

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1846 – இலங்கையில் கைம்பெண்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது.
- 1852 – ஆங்கிலேய வானியலாளர் யோன் ரசல் இந்த் என்பவர் 22 கலியோப் என்ற சிறுகோளைக் கண்டுபிடித்தார்.
- 1904 – ஆங்கிலேயப் பொறியியலாளர் ஜோன் பிளெமிங் வெற்றிடக் குழாயைக் கண்டுபிடித்தார்.
- 1945 – யுனெஸ்கோ நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1965 – சோவியத்தின் வெனேரா-3 விண்கப்பல் வெள்ளிக்கோளுக்கு செலுத்தப்பட்டது. வேறொரு கோளின் தரையை அடைந்த முதலாவது விண் கப்பல் இதுவாகும்.
- 1973 – மூன்று விண்ணோடிகளுடன் 84 நாள் பயணமாக ஸ்கைலேப்-4 விண்கலத்தை நாசா ஏவியது.
- 2002 – சார்ஸ் நோய் முதன்முதலில் சீனாவின் குவாங்டோங் என்ற இடத்தில் காணப்பட்டது.

# சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயற்படுவது முக்கியம்

## சிறுவர்களுக்கான நாடாளுமன்ற ஒன்றியத்தில் கவனம்






இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் செயற்படும் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயற்படுவதன் முக்கியத்துவம் தொடர்பில் சிறுவர்களுக்கான நாடாளுமன்ற ஒன்றியம் கவனம் செலுத்தியது.

சிறுவர்களுக்கான நாடாளுமன்ற ஒன்றியம் அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி விஜயரத்ன தலைமையில் அண்மையில் (08) கூடியபோதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் செயற்படும் பல்வேறு நிறுவனங்களுக்கு காணப்படும் சவால்கள் மற்றும் சிக்கல்களை இனங்கண்டு சம்பந்தப்பட்ட தரப்பினரை அணுகி அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஒருங்கிணைந்து பணியாற்றுவதை உறுதிப்படுத்தும் நோக்கிலும் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதற்கமைய, பெண்கள், குழந்தைகள் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் இயங்கும் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் ஆகிய நிறுவனங்களின் பணிகள் மற்றும் அவற்றை செயற்படுத்தும்போது எழும் சவால்கள் மற்றும் சிக்கல்கள் தொடர்பில் முன்வைப்புகள் இதன்போது மேற்கொள்ளப்பட்டன. மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம் (UNICEF) இலங்கையில் மேற்கொள்ளும் செயற்பாடுகள் தொடர்பிலும் இங்கு முன்வைப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த நிறுவனங்களின் காணப்படும் ஊழியர் வெற்றிடங்கள், கட்டட தேவை, வாகனத் தேவைகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளில் காணப்படும் குறைபாடுகள், தொடர்பில் வருகை தந்த அதிகாரிகள் கருத்துத் தெரிவித்தனர். சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 618 பதவிகளில் 284 பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுகின்றமை இங்கு புலப்பட்டதுடன், விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்றவகையில் இது குறித்து ஜனாதிபதிக்கு அறிவித்து வெற்றிடங்களை பூர்த்திசெய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு பெண்கள், குழந்தைகள் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளருக்கு ஒன்றியம் அறிவுறுத்தல் வழங்கியது.

இந்நாட்டிலுள்ள சிறுவர்களுக்குத் தரமான கல்வியை வழங்குதல், உரிய சுகாதாரப் பாதுகாப்பைப் பெற்றுக்கொடுத்தல், தற்பொழுது காணப்படும் வளங்கள் மற்றும் அதிகாரிகளின் திறன்களை அதிகரித்தல், சமுதாயம்சார் சீர்திருத்தம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் ஊடகங்களில் அறிக்கையிடும் போது கருத்திற்கொள்ளவேண்டிய விடயங்கள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இங்கு முன்வைக்கப்பட்ட யோசனைகள் மற்றும் சிக்கல்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினரை ஒன்றியத்தின் முன்னிலையில் அழைத்து தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக ஒன்றியத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜயரத்ன இதன்போது குறிப்பிட்டார்.

இதேவேளை, முன்பிள்ளைப்பருவ கல்வி தொடர்பான தேசிய கொள்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் இங்கு புலப்பட்டதுடன், மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் காணப்படும் வேறுபாடுகள் மற்றும் ஒருமைப்பாடுகளை கருத்திற்கொண்டு முன்பிள்ளைப்பருவ கல்வியை முறைமைப்படுத்துவதன் அவசியத்தைப் பூர்த்திசெய்யும் நோக்கில் சட்டக்கட்டமைப்பொன்றில் செயற்படும் வகையில் இது தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், 2019ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையை செயற்படுத்துவதற்கான 5 ஆண்டுகால செயற்பாட்டுத் திட்டம் (2023 - 2027) தயாரிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் இதன்போது குறிப்பிடப்பட்டது.

இக்கூட்டத்தில் ஒன்றியத்தின் இணை உப தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களுமான (வைத்திய கலாநிதி) சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மற்றும் வேலு குமார், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இராஜாங்க அமைச்சர்களான கீதா குமாரசிங்க மற்றும் டயனா கமகே, நாடாளுமன்ற உறுப்பினர்களான தலதா அத்துகோரள, சந்திம வீரக்கொடி, ஜே.சி.அலவத்துவல, அசோக் அபேசிங்க, மயந்த திசாநாயக்க, ரஜிகா விக்ரமசிங்க, வீரசுமன வீரசிங்க, நாடாளுமன்ற உதவிச் செயளாலர் நாயகம் டிகிரி கே.ஜயதிலக்க மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அமைச்சர் (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ மற்றும் முதிதா பிரிஸாந்தி ஆகியோர் ஒன்றியத்தின் தலைவரின் அனுமதியுடன் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# மீரிகம விபத்தில் தந்தை, மகள் பலி!

## மது அருந்திய சாரதியால் சம்பவம்



மீரிகம – பஸ்யால வீதியில் கொட்டகந்த சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் (14) இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கலேலிய பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய ஒருவரும் அவரது 14 வயது மகளும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீரிகமவிலிருந்து பஸ்யால நோக்கிப் பயணித்த காரொன்று வீதியில் பயணித்த தந்தையையும், மகளையும் மோதி விபத்துக் குள்ளாகியுள்ளது.

கல்வி நிலையத்திலிருந்து திரும்பிய மகளை, தந்தை அழைத்துச் சென்றபோதே இந்த விபத்து நடந்ததுள்ளது.

விபத்தையடுத்து. தப்பிச் சென்ற காரின் சாரதியை பல்லேவெல பொலிஸார் கைது செய்து வைத்திய பரிசோதனைக்கு அனுப்பி வைத்தபோது அவர் மது அருந்தியிருந்தமை தெரியவந்துள்ளது.

# அமெரிக்க செனட் சபையின் அதிகாரிகள் சபாநாயகர் மஹிந்த யாப்பாவுடன் பேச்சு




ஐக்கிய அமெரிக்க செனட் சபையின் வெளிநாட்டு உறவுகள் குழுவின் (Senate Foreign Relations Committee) பணியாட்தொகுதியின் அதிகாரிகள் குழு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை அண்மையில் (10) சந்தித்தது.

இந்தக் குழுவினர் நாடாளுமன்றத்தில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்ததுடன், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். இதன்போது இவர்கள் நாடாளுமன்றத்தின் குழு முறைமைகள் குறித்து சபாநாயகர் மற்றும் செயலாளர் நாயகத்துடன் விரிவாகக் கலந்துரையாடினர்.



அத்துடன், நாடாளுமன்றத்தின் அமைவிடம், வரலாறு மற்றும் கட்டட வடிவமைப்புத் தொடர்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் இக்குழுவினருக்கு விளக்கமளித்தார். இதன்பின்னர் இந்தக் குழுவினர் சபாநாயகர் மற்றும் செயலாளர் நாயகத்துடன் பகல் விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டனர்.

அத்துடன், இந்தச் சந்திப்பில் யுஎஸ்எயிட் நிறுவனத்தின் செயற்பாட்டுப் பணிப்பாளர் (இலங்கை மற்றும் மாலைதீவு) கப்ரியால் பெர்னாண்டோ க்ரேவ் மற்றும் NDI நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் துசிதா பிலபிட்டிய உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

# துறைமுக இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர யாழ். விஜயம்





(யாழ். செய்தியாளர்)

துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர நேற்று யாழ்ப்பாணத்திற்கு செவ்வாய்க்கிழமை விஜயம் மேற்கொண்டிருந்தார்.

காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் என்வற்றை அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஆராய்ந்ததுடன், மேலும் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் தொடர்பிலும், அவற்றிலுள்ள சவால்கள் தொடர்பிலும் அங்கிருந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருந்தார்.

முன்னதாக காங்கேசன்துறை துறைமுகத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டதுடன், முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்திகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

பின்னர் அங்கிருந்து பலாலி விமான நிலையத்தை நேரில் பார்வையிட்டு, விமான நிலையத்தை இயக்குவது தொடர்பிலும், மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் தொடர்பிலும் துறைசார் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.





**மத்திய கொழும்பு ஆட்டுப்பட்டித்தெரு பாய் தோட்டத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் காளியம்மன் ஆலயத்தில் தேர்த் திருவிழா நடைபெற்றது. பிரதம குரு சிவஸ்ரீ நவரத்தின பிரபுதேவா குருக்கள் (யாழ் கொழும்புத்துறை கிழக்கு) முத்துமாரியம்மன் கோயில் ஆதின குரு உற்சவ பிரதம குரு சிவஸ்ரீ சிவக்குமார் குருக்கள் (கண்டி ஐயா), ஸ்ரீ துர்க்கா காளியம்மன் ஆலயம், மஜித் பிளேஸ் ஆலய விசேட குரு சிவஸ்ரீ சௌந்தராஜன் குருக்கள், (யாழ்ப்பாணம்), சிவஸ்ரீ சபரீஸ்வரன் குருக்கள் (கொழும்பு), ஆலய நித்திய குரு சிவஸ்ரீ வேலு கிருஸ்ணமூர்த்தி குருக்கள், தலைவர் சரவணன் உட்பட நிர்வாகக் குழுவினர்கள், பெருந்தொகை பக்தர்கள் கலந்துகொண்டனர்.** *(படப்பிடிப்பு - நஸார்)*

## 15.11.2022 நாணய மாற்று வீதம்

CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 128 68 0 | 140 687 |
| கனேடியன் டொலர் | 157 8504 | 170 2 86 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 4 1251 | 42 2053 |
| யூரோ | 258 8656 | 274 277 |
| ஜப்பான் யென் | 1 4426 | 1 55 2 |
| சிங்கப்பூர் டொலர் | 150 1265 | 161 11 1 |
| ஸ்ரேலிங் பவுன் | 311 3083 | 327 7473 |
| சுவிஸ் பிரான்ங் | 267 40 0 | 285 7066 |
| ஐ.அ.டொலர் | 25 8571 | 260 6488 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 853 016 |
| குவைட் | குவைட் தினார் | 0,070 0424 |
| ஓமான் | ஓமான் றியால் | 833 0 57 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 7035 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 6004 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 8516 |



# உடைந்துவிழும் மின் கம்பங்களால் நோர்வூட் குடியிருப்புகள் ஆபத்தில்

## உடனடி நடவடிக்கை அவசியமென மக்கள் வேண்டுகோள்

(மஸ்கெலியா செய்தியாளர்)

நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட நோர்வூட் கிவ் மேல் பிரிவு தோட்டத்தில் உடைந்து விழும் நிலையில் மின்கம்பங்கள் காணப்படுவதால் அந்த தோட்டத்தில் வாழும் சுமார் 700 பேர் வரை ஆபத்தான நிலையில் இருப்பதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.


கிவ் மேல் பிரிவு தோட்டத்தில் சுமார் 120 குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள், பெரியவர்கள் என சுமார் 700இற்கும் மேற்பட்டோர் வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த தோட்டத்தில் 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மரத்திலான மின் கம்பங்கள் நடப்பட்டு மின் இணைப்பு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த மின் கம்பங்கள் தற்போது அடியில் இற்றுப்போய் உடைந்து விழும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ளன. இந்த விடயம் குறித்து அங்குள்ள கிராம அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்டதை தொடர்ந்து குறித்த மின் கம்பங்களை மாற்றுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடவடிக்கை எடுக்கப்பட்டு புதிய மின் கம்பங்கள் நடப்பட்டுள்ளன.

எனினும், குறித்த புதிய மின் கம்பங்களில் மின் இணைப்பு செய்யாதுள்ளதன் காரணமாக பழைய மின் கம்பங்கள் உடைந்து வீழ்ந்து தோட்டத்தொழிலாளர்களின் தொடர்





குடியிருப்புகள் தீப்பற்றி எரியக்கூடிய ஆபத்து காணப்படுவதாகவும், இதனால் தங்களுடைய உயிர் மற்றும் உடைமைகளுக்கு ஆபத்திருப்பதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் உள்ள தொடர் குடியிருப்புகளில் உள்ள கூரையின் மீது தற்போது மின் இணைப்பு வயர்கள் தகரத்துடன் உரசிக்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

எது எவ்வாறான போதிலும் மின் ஒழுக்கு காரணமாக மலையகத்தில் உள்ள பல தோட்டங்களில் வீடுகள் தீப்பிடித்து உடைமைகள் அழிந்துள்ளதால் இதனை உடனடியாக நிவர்த்தி செய்து தர வேண்டியது பொறுப்பு வாய்ந்தவர்களின் கடமை என்பதனை சுட்டிக்காட்ட வேண்டியது கட்டாயமாகும்.

இது குறித்த பொது மக்கள் கருத்து தெரிவிக்கையில் கடந்த பல வருடங்களாக இந்த தோட்டத்தில் மின் வழங்கப்பட்டுள்ள மரத்திலான மின்கம்பங்கள் இற்றுப்போய் உடைந்து விழும் ஆபத்தில் உள்ளன.

இது குறித்த நாங்கள் மின்சாரசபை அதிகாரிகள் மற்றும் நோர்வூட் பிரதேச சபை உள்ளிட்ட பல அதிகாரிகளுக்கு தெரிவித்தோம். அதனை தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு முன் கொங்கிறீட் மற்றும் இரும்பிலான மின் கம்பங்களை நாட்டி விட்டு சென்றார்கள். இதுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

இது குறித்து எத்தனையோ தடவைகள் அவர்களுக்கு தெளிவுபடுத்தியும் கூட இதுவரை மாற்றவில்லை. இதனால் பல மின் கம்பங்கள் உடைந்து விழும் நிலையில் உள்ளன. நாங்கள் வீடுகளில் இல்லாத போது இவை விழுந்தால் என்ன செய்வது? எங்களுடைய பிள்ளைகள் என்ன செய்வார்கள்? வீடுகள் தீப்பிடிக்காதா? எனவே, எதாவது ஒரு அசம்பாவிதம் நிகழ்வதற்கு முன் இவற்றினை மாற்றிக்கொடுக்க வேண்டும் என்பதனை நாங்கள் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் என அத் தோட்டத்தில் உள்ள தொழிலாளர்கள் தெரிவித்தனர்.









**ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட பன்மூர் தமிழ் மகா வித்தியாலயத்தில் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு அதிபர் டி.சண்முகநாதன் தலைமையில் ஹட்டன் டி.கே.டபிள்யூ. மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது பிரதம அதிதியாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.ஆர்.சத்தியேந்திரா, உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லக்ஷ்மி பிரபா ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களையும் பதக்கங்களையும் வழங்கிவைத்தனர்.**

**(தலவாக்கலை செய்தியாளர்)**

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் மீது வாள்வெட்டு;

## மாத்தளையில் மூன்றரை வயது குழந்தை உயிரிழப்பு

மாத்தளை – ரபிமகம பகுதியிலுள்ள வீடொன்றில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரை, அயல் வீட்டுக்காரர் ஒருவர் வாளால் தாக்கியதில் மூன்றரை வயது ஆண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

அயல் வீட்டு நபரொருவரால் நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்த தாய், மகள் மற்றும் இரு மகன்கள் மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து, மூன்றரை வயது ஆண் குழந்தை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் காயமுற்ற 38 வயதான தாயும் 19 வயது மகளும் 15 வயது மகனும் மாத்தளை வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் கூறினர்.

இரு குடும்பங்களுக்கிடையில் நீண்ட காலமாக இருந்துவந்த தனிப்பட்ட தகராறே இந்த கொலைச் சம்பவத்திற்கு காரணம் என ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வாளுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# பொறுப்புக் கூறுவோர் யார்?



**மலையகத்தில் தொடர்ச்சியாக அடைமழை பெய்துவரும் நிலையில், ஹட்டன் பஸ் தரிப்பிடம் மிகவும் மோசமாகக் காட்சியளிக்கிறது.**

**(மஸ்கெலியா செய்தியாளர்)**

# மலையகப் பகுதிகளில் மண்சரிவு அபாயம்

மலையகப் பகுதிகள் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியாக அடைமழை பெய்து வருவதால் ஏழு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆய்வு நிறுவனத்தின் அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், பதுளை, கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# யாழில் மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் மக்களின் அஞ்சலிக்காக

**(யாழ். நிருபர்)**



யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளன.

நவம்பர் 21ஆம் திகதி காலை 9 மணி முதல் 27ஆம் திகதிவரையில் அஞ்சலிக்காக இக்கல்வெட்டுகள் வைக்கப்பட்டிருக்கும். அத்தருணத்தில் மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு அஞ்சலி செலுத்த முடியும். இதற்கு அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று யாழ். மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் கோரிக்கை விடுத்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இந்தக் கோரிக்கையை அவர் விடுத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக யாழ். மாநகர சபைக்கு சொந்தமான இடத்தை உரிய அனுமதிகளுடன் வாடகைக்குப் பெற்று குறித்த கல்வெட்டுகள் வைக்கப்படவுள்ளன.

உயிரிழந்த உறவுகளை நினைவுகூருவதற்கு அனைவருக்கும் உரிமையுள்ளது. அந்தவகையில் எமது உறவுகளான சகோதர சகோதரிகளை நினைவுகூருவதை யாரும் தடுக்க முனைவது ஏற்புடையதல்ல - என்றார்.

# இளவாலையில் கசிப்புடன் இரு பெண்கள் கைது

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் (14) 21 லீற்றர் கசிப்புடன் இரு பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். காங்கேசன்துறை விசேட மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட அதிரடி சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது 27 வயதுப் பெண் 16 லீற்றர் கசிப்புடனும், 42 வயதுப் பெண் 5 லீற்றர் கசிப்புடனும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீட்கப்பட்ட கசிப்புடன் இளவாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இளவாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சீரற்ற காலநிலையால் சரிந்து வீழ்ந்த 200 வருட பழமைவாய்ந்த மலைவேம்பு மரம்



யாழ்ப்பாணம் கச்சேரி வீதியில் சீரற்ற காலநிலையின் காரணமாக இருநூறு வருடங்கள் பழமை வாய்ந்த மலைவேம்பு மரமொன்று நேற்று முன்தினம் (14) இரவு 11 மணியளவில் சரிந்து விழுந்ததால் அருகில் இருந்த வீட்டு மதில் பகுதியளவில் சேதமடைந்துள்ளதோடு, வீதியில் யாரும் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

இச்சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர் கருத்து தெரிவிக்கையில்,

200 வருடங்கள் பழமை வாய்ந்த இந்த மரத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாதுகாக்கத் தவறியமையினால் இந்த மரம் வீதியின் குறுக்கே விழுந்துள்ளது. இரவு 11 மணியளவில் இச்சம்பவர் இடம்பெற்றமையினால் வீதியில் யாரும் பயணிக்காத நிலையில், உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. ஆனால், இதுவே பகல் வேளையிலோ அல்லது மக்கள் நடமாட்டம் நிறைந்த நேரத்திலோ இடம் பெற்றிருந்தால் உயிர்ச்சேதங்களும் ஏற்பட்டிருக்கும் – என்றார்.

இதன் காரணமாக யாழ்ப்பாண மாநகர சபையினரால் கச்சேரி - நல்லூர் பிரதான வீதியானது போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டுள்ளதோடு, விழுந்த மரத்தை அகற்றும் நடவடிக்கைகளை உரிய சம்பந்தப்பட்ட தரப்பினர் மேற்கொண்டு வருகின்றார்கள்.

# கல்வியங்காட்டில் சைக்கிளில் பயணித்த பெண்ணிடம் தங்கச்சங்கிலி அபகரிப்பு

**(யாழ். நிருபர்)**

யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஜி.பி.எஸ். ஒழுங்கையில் சைக்கிளில் பயணித்த பெண்ணிடம் ஒன்றே கால் பவுண் தங்கச்சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே பெண்ணை வீதியில் மறித்து இந்த வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டுவிட்டுத் தப்பித்துள்ளனர். நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த வழிப்பறி தொடர்பான சி.சி.டி.வி. பதிவு காணொளி விசாரணைகளுக்காக கோப்பாய் பொலிஸாரினால் பெறப்பட்டுள்ளது.

தங்கச்சங்கிலியைப் பறிகொடுத்த பெண் ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஆலயத்துக்கு வழிபடச் செல்பவர் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு தீவிர சிகிச்சை – உயிர்காப்பு வசதிகள் கொண்ட Ford அம்பியூலன்ஸ் கையளிப்பு







**(மன்னார் நகர் நிருபர்)**

மத்திய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட தீவிர சிகிச்சை, உயிர்காப்பு வசதிகளைக் கொண்ட Ford அம்பியூலன்ஸ் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த அம்பியூலன்ஸை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் பெற்றுக்கொண்டு, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர தேவைகளுக்காக நேற்று (15) செவ்வாய்க்கிழமை வைபவ ரீதியாக வழங்கினார்.

இந்நிகழ்வில் மதத் தலைவர்கள், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பணியாளர்கள், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைப் பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# யாழில் போலி உறுதி முடிப்பு - சட்டத்தரணிக்குப் பிணை; ஏனையோர் தொடர்ந்தும் விளக்கமறியலில்!

**(யாழ். நிருபர்)**

யாழ். அராலி வீதியில் போலி உறுதி மூலம் காணி மோசடி இடம்பெற்றமை தொடர்பான குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சட்டத்தரணியை நிபந்தனையுடன் பிணையில் விடுவிக்க யாழ். மேலதிக நீதிவான் திருமதி நளினி சுபாஸ்கரன் கட்டளையிட்டார்.

யாழ். அராலி வீதி, பொம்மைவெளி பகுதியிலுள்ள காணியொன்று அதன் இறந்துவிட்ட உரிமையாளர்களான தம்பதியின் போலிக் கையொப்பங்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட உறுதியினால் மோசடியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டது. அது தொடர்பாக யாழ். சிறப்பு குற்ற விசாரணைப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த வழக்கில் குற்றஞ்சுமத்தப்பட்ட சட்டத்தரணி உள்ளிட்ட 9 சந்தேக நபர்களும் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்கள் சார்பான பிணை விண்ணப்பத்தை ஆராய்ந்து எதிர்வரும் 21ஆம் திகதி கட்டளை வழங்கப்படும் என்று தவணையிட்ட மன்று அன்றுவரை சந்தேக நபர்கள் 9 பேரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

இந்நிலையில், சட்டத்தரணி சார்பில் நேற்று முன்தினம் (14) நகர்த்தல் பத்திரத்தை முன்வைத்து ஆதரித்த சட்டத்தரணி, கலாநிதி குமாரவடிவேல் குருபரன் பிணை விண்ணப்பத்தை முன்வைத்து மேலதிக காரணங்களை மன்றில் சமர்ப்பித்தார்.

“சட்டத்தரணி பல்வேறு மருத்துவ சிகிச்சைகளுக்கு உட்பட்டவர். அவரது சிகிச்சை தொடர்பான மருத்துவச் சான்றிதழ்கள் மன்றின் கவனத்துக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. அவர் எந்த வகையிலும் இந்த வழக்கின் விசாரணைகளுக்கு இடையூறாக ஒருபோதும் செயற்படமாட்டார். சட்டத்தரணி என்ற வகையில் அவர் இந்த மோசடி தொடர்பான உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்ட ஒத்துழைப்பு வழங்குவார் என்பதை உறுதிபட மன்றிடம் முன்வைக்கின்றோம். அவர் பிணையில் உள்ள காலப்பகுதியில் நீதி பரிபாலனத்திலோ பொலிஸ் விசாரணைகளிலோ தலையீடு செய்யமாட்டார் என்ற அடிப்படையிலேயே பொலிஸாரின் விண்ணப்பங்களும் அமைந்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. இத்தகைய காரணங்களின் அடிப்படையில் அவரை பிணையில் விடுவிப்பதற்கான கட்டளையை ஆக்குமாறு கோருகின்றோம்” என சட்டத்தரணி, கலாநிதி கு.குருபரன் சமர்ப்பணம் செய்தார். சந்தேக நபர் சார்பான சமர்ப்பணத்தை ஆராய்ந்த மன்று சட்டத்தரணியை நிபந்தனையுடனான பிணையில் செல்ல அனுமதியளித்தது. அதேவேளை ஏனைய 08 பேரும் தொடர்ந்தும் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த வழக்கு எதிர்வரும் 21ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

தமிழன்
வணிக உலகம்
Business world
www.thamilan.lk

# நஷ்டமீட்டும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்க நான்கு அம்சக் கொள்கைகளை SLT குழும தவிசாளர் முன்மொழிவு



SLT குழுமத்தின் தவிசாளர் றொஹான் பெர்னாண்டோ

இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள தேசிய நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்கு, சொத்துகளை விற்பனை செய்வதென்பது இலகுவான தீர்வாக அமைந்திருந்தாலும், நஷ்டமீட்டிவரும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதனூடாக - அவற்றை தூய, அனுபவம் வாய்ந்த கூட்டாண்மை அதிகாரிகளைக்கொண்டு நிர்வகிக்கப்பதனூடாக இலாபமீட்டக்கூடிய வகையில் மாற்றியமைக்க முடியும் - என SLT குழும தவிசாளர் றொஹான் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அரச உரிமை நிறுவனங்கள், அவை முறையாக நிர்வகிக்கப்படுகின்றனவா அல்லது தவறாக நிர்வகிக்கப்படுகின்றனவா எனும் தலைப்பில் இடம்பெற்ற CMA தேசிய நிர்வாக கணக்கீட்டு மாநாடு - 2022 நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், "பல்வேறு பிரிவுகளில் எமது நாடு பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. தற்போது நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவது என்பது பற்றி, நாட்டின் பொருளாதாரத்தை மறுசீரமைப்பது பற்றி கவனம் செலுத்தும் அரசாங்கம், பொருளாதார நிபுணர்கள், சிந்தனையாளர்கள் மற்றும் நன்கொடை வழங்குநர்கள் மத்தியில் அதிகளவு பேசப்படும் விடயமாக அமைந்துள்ளது" - என்றார்.

அவர் மேலும் விளக்கமளிக்கையில், "எமது நிறுவனத்தை (SLT) உதாரணமாக எடுத்துக் கொண்டால், தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் நம்பிக்கையைப் பெறுவதற்கு எமது அடிப்படைக் கொள்கைகளான மோசடியின்மை, வினைத்திறனை மேம்படுத்துவது, விரயத்தைக் குறைப்பது மற்றும் நிர்வாகத்தை ஈடுபடுத்துவது போன்றன தொடர்பில் அவர்களின் உடன்பாட்டைப் பெற்றோம். ஆம், இந்த நான்கு அம்சங்களையும் முன்வைத்து, எமது ஊழியர்களுடன் எவ்விதமான முரண்பாடுகளுமின்றி எம்மால் இயங்க முடிந்தது" - என்றார்.அவர் தொடர்ந்து விளக்கமளிக்கையில், "அளவுக்கதிமான சுமையைக் கொண்டுள்ள எமது போக்குவரத்துத்துறையை எடுத்துக் கொண்டால், புகையிரதத் திணைக்களம் நிலையான உட்கட்டமைப்புகளில் பல பில்லியன் ரூபா பெறுமதியான சொத்துகளைக்கொண்டுள்ளது. இந்தத் தண்டவாளங்களில் எந்த வேகத்தில் புகையிரதங்கள் பயணிக்கின்றன என்பதை நாம் அவதானிக்கின்றோம்? ஊழியர்களின் பங்கேற்புடன் இவற்றை விற்பனை செய்ய வேண்டுமா அல்லது மீளமைக்க வேண்டுமா? சிந்திக்கவேண்டிய விடயம். நெரிசலான நேரத்தில் பொதுப் போக்குவரத்துச் சேவையில் பற்றாக்குறை நிலவுகின்றமை, அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றுகின்றமை, நெருக்கடி, போதியளவு திட்டமிடலின்மை, எரிபொருள் விரயம் போன்றன தொடர்பில் அவசரமாக கவனம் செலுத்த வேண்டும். தேசிய சுமையிலிருந்து இலாபமீட்டும் முத்தாக மாற்றக்கூடிய ஓர் அரச நிறுவனமாக இது அமைந்துள்ளது" - என்றார்.

நாட்டின் சட்டக் கட்டமைப்பு தொடர்பில் குறிப்பிடுகையில், "டிஜிட்டல் கட்டமைப்பு களினூடாக இலங்கையின் நீதிச் செயன்முறையை மேம்படுத்தி, காலதாமதமின்றி தீர்ப்புகளை வழங்க முடியும். அதிகளவான வழக்குகள் மற்றும் தீர்வுகளை வழங்குவதற்கு நீண்ட காலம் எடுக்கின்றமை போன்றன காரணமாக எமது குடிமக்களுக்குப் பொருத்தமான சட்ட மீளமைப்பு மற்றும் சமத்துவமான நிவாரணத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆவணங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புகளிடையே போதியளவு ஒன்றிணைவு இன்மையால், கட்டமைப்பு அதிகளவு சுமையைக்கொண்டதாக காணப்படுகின்றது. பெருமளவானோர், தமது அதிக நாட்களை நீதிமன்றத்தில் செலவிட்டபோதிலும், தமது வழக்கு தொடர்பில் மிகவும் குறைந்த தகவல்களுடனே வெளியே வருகின்றனர்" - என்றார்.

பெர்னாண்டோ மேலும் குறிப்பிடுகையில், "எமது விவசாயப் பெறுமதி சங்கிலியும் பிரச்சினை களுக்கு முகங்கொடுத்துள்ளது. அதுபோலவே எமது சுகாதாரப் பராமரிப்புத்துறையும் சுமைகளை எதிர்கொண்டுள்ளது. சவால்களைப் புரிந்துகொண்டு, இந்தப் பிரச்சினைகளை தீர்க்க முன்வர வேண்டும். முக்கியத்துவம் வாய்ந்த துறைகள் மற்றும் சேவைகள், வினைத்திறன் வாய்ந்த, வெளிப்படையான மற்றும் இலாபமீட்டும் அமைப்புகளாக மாற்றப்படுவதனூடாக, மக்களின் வாழ்க்கையை மாற்றியமைக்க அவற்றை பயன்படுத்த முடியும். இந்நாட்டுக்குத் தேவையான உண்மையான கட்டமைப்பு மாற்றமாக இது அமைந்துள்ளது. தற்போது அரச நலன்புரித் திட்டங்கள் செல்வந்தர்கள் அல்லது வறியவர்கள் என பாகுபாடின்றி அரசியல் தலையீட்டின் காரணமாக அனைவரையும் சென்றடைகின்றன. உண்மையில் இந்த நலன்புரித் திட்டங்கள், சமூகத்தில் தாழ்ந்த நிலையில் காணப்படுவோரை முறையாக இனங்கண்டு, அவர்களை சென்றடையச் செய்ய வேண்டும். இதற்கு டிஜிட்டல் கட்டமைப்பை பயன்படுத்தலாம்" - என்றார்.

"ஆம், நாம் பல சவால்களுக்கும் பிரச்சினை களுக்கும் முகங்கொடுத்துள்ளோம். நெருக்கடிகள் நிலவுகையில், அவற்றை வாய்ப்புகளாக மாற்றிக் கொள்வதற்கு, புதிய வழியில் பார்வையிடுவதுடன், சிந்திப்பது மற்றும் பதிலளிப்பது போன்றன தேவைப்படுகின்றன. இதனை எவ்வாறு செய்யலாம் என்பதை SLT உணர்த்தியுள்ளது. வாய்ப்புகளை கையகப்படுத்துவதற்கு சிறந்த உதாரணமாக SLT அமைந்திருப்பதுடன், தேசத்துக்கு அவசியமான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாக அமைந்துள்ளது" - என பெர்னாண்டோ தெரிவித்தார்.

# Laptop Fiestaஇன் வெற்றியாளர்களுக்கு SLT-MOBITEL இடமிருந்து மடிக்கணினிகள்




நிலையான மற்றும் மொபைல் வாடிக்கையாளர்கள் தொடர்ச்சியாக கட்டணப் பட்டியல் கட்டணங்களை செலுத்துவது மற்றும் ரீலோட்களை மேற்கொள்வதை கௌரவிக்கும் வகையில்,தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL முன்னெடுத்திருந்த Laptop Fiesta நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றியாளர்களுக்கு மடிக்கணினிகளை அன்பளிப்புச் செய்திருந்தது.

டிஜிட்டல் இடைவெளியை குறைக்கும் வகையிலும், மாணவர்கள், தொழில்முயற்சியாளர்கள், சிறியளவிலான வியாபாரங்கள் மற்றும் அறிவை நாடுவோருக்கு டிஜிட்டல் அறிவை மேம்படுத்தும் வகையிலும் Laptop Fiesta நிகழ்ச்சித்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சியினூடாக நிலையான மற்றும் மொபைல் வாடிக்கையாளர்கள் வருடம் முழுவதிலும் கட்டணப் பட்டியல்கள் கொடுப்பனவுகள் மற்றும் ரீலோட்களை மேற்கொள்கின்றமைக்காக, மடிக்கணினியை வெற்றியீட்டுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

# டயலொக் தனது சமீபத்திய Dialog Television ஒலிபரப்பு மையம் மற்றும் செயற்கைக்கோள் புவி நிலையத்தை புத்தளத்தில் திறந்துள்ளது



அதிநவீன தொழில்நுட்பத்தின் மூலம் இணையற்ற பொழுதுபோக்கு அனுபவங்களை வழங்குவதற்கு இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி அர்ப்பணிப்புடன் புத்தளத்தில் தனது சமீபத்திய டயலொக் டெலிவிஷன் ஒலிபரப்பு மையம் மற்றும் செயற்கைக்கோள் புவி நிலையம் ஆகியவற்றை புத்தளத்தில் திறந்துள்ளது

நாட்டின் மிகப்பெரிய பொழுதுபோக்கிற்கான ஒருங்கிணைப்பாளராக டயலொக் தனது வாடிக்கையாளர்களுக்கு உயர்தரத்திலான நம்பகமான தொலைக்காட்சி சேவைகளை உறுதிசெய்து வழங்குவதற்கான வசதியை உருவாக்கியுள்ளது.

மாலபையில் அமைந்துள்ள அதன் முதன்மை ஒலிபரப்பு மையம் மற்றும் செயற்கைக்கோள் புவி நிலையத்தைபோன்றே, புத்தளத்திலுள்ள டயலொக் தொலைக்காட்சி ஒலிபரப்பு மையம் மற்றும் செயற்கைக்கோள் புவி நிலையம் ஆகியவையும் அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் வசதிகளுடன் பணியமர்த்தப்பட்டு, உயர் சேவை கிடைப்பதை இலக்காகக்கொண்டு முதன்மையாக செயல்படுகின்றன.

இந்நிகழ்வின்போது கருத்து தெரிவித்த டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும தலைமை தொழில்நுட்ப அதிகாரி பிரதீப் டி அல்மேடா, "இலங்கையின் முன்னணி Pay TV சேவை வழங்குனரான Dialog Television ஆனது, எங்களின் வாடிக்கையாளர்களுக்கு இணையற்ற உலகத்தரம் வாய்ந்த பொழுதுபோக்கு மற்றும் கல்விச் சேவைகளை வழங்குவதனையே முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது'' என்றார்.

# அமைதியிலிருந்து ஆதரவு வரை செவித்திறன் குறைபாடுள்ள தொழில்முயற்சியாளரின் பயணம்

இசுரு லக்ஷான் வீரசூரிய மூன்று வயதாக இருந்தபோது மருத்துவர் ஒருவரை சந்திக்கச் சென்றபோது அந்நியர் ஒருவரை சந்தித்த சந்தர்ப்பம் அவரின் வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்தது. இசுருவின் நடத்தையிலுள்ள முரண்பாடுகளை அவரது தாயார் பத்மா குமாரி கவனித்ததையடுத்து அவருக்கு செவித்திறன் குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டது.

இசுருவை பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் (WDC) பணியாளர் ஒருவர் பார்க்க நேர்ந்தது. அவருக்கு WDC வழங்கக்கூடிய வேறு வகையான ஆதரவு தேவை என்பதை அவர் உணர்ந்தார். WDCஆனது பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பிற ஒதுக்கப்பட்ட குழுக்களுக்கு ஆதரவு அளிக்கிறது மற்றும் அதன் சமூக அடிப்படையிலான மறுவாழ்வு (CBR) திட்டத்தின் மூலம் சிகிச்சை, முறையான சைகை மொழி வகுப்புகள் மற்றும் பிற தனிப்பயனாக்கப்பட்ட சிகிச்சைகளை வழங்குகிறது.

கண்டி மாவட்டத்திலுள்ள 11 நிலையங்களில் வீட்டு அடிப்படையிலான சிகிச்சைகளும் உள்ளடங்கும். இத்திட்டத்தின்கீழ் விரைவாகக் கற்கும் ஆற்றலைப் பெற்றிருந்த இசுரு, ஐந்து வயதிற்குள் செவித்திறன் குறைபாடுடையோருக்கான சிறப்புப் பள்ளியில் ஒருங்கிணைவதற்கு தயார் நிலையில் இருந்தார்.



"நான் மிகவும் இளமையாக இருந்தபோது WDC இல் சேர்ந்தேன். நான் சைகை மொழியைக் கற்றுக்கொண்டேன். எனக்கு பல புதிய நண்பர்கள் கிடைத்தார்கள் எனது சமூக திறன்களை வளர்த்துக்கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமைந்தது" என்கிறார் இசுரு.

அவரது தாயார் தெரிவிக்கையில், "WDC ஆதரவளித்தமையானது இசுரு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் வரை சிறப்புப் பள்ளியில் கல்வி கற்பதற்கு உதவியது. பின்னர் அவர் அரசாங்கத்துக்கு சொந்தமான சிறப்பு தொழிற்பயிற்சி பாடசாலையில் பயின்றார். அங்கு அவர் தோல் தயாரிப்புகளை வடிவமைப்பதில் பயிற்சி பெற்றார்'' - என்றார்.

# சதாஹரித குழுமம் – வணிக வனவியல்துறையில் 20ஆவது ஆண்டு நிறைவை பெருமையுடன் கொண்டாடுகிறது



இலங்கையின் பசுமை வணிக வனவியல் துறையில் முன்னணியில் திகழும் சதாஹரித குழுமத்தின் பெருமைமிக்க 20ஆவது ஆண்டு நிறைவை 2022ஆம் ஆண்டு குறிக்கிறது.

சதாஹரித குழுமம் தனது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை மக்களுக்கு சமீபத்திய பசுமை முதலீட்டுத் திட்டங்கள் மற்றும் விசேட வரப்பிரசாதங்களை வழங்குவதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

இலங்கையின் வர்த்தக வனவியல்துறையில் இரண்டு தசாப்தகால பெருமைமிக்க சாதனைகளுடன், சதாஹரித குழுமம் இலங்கைக்கு புத்தாக்கமான பசுமை முதலீட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தியதுடன், தற்போது மிகவும் பிரபலமான அகில் மரக் (Agarwood) காடுகளை இலங்கைக்கு அறிமுகப்படுத்திய முன்னோடி நிறுவனமாகப் போற்றப்படுகிறது. 2002இல் ஸ்தாபிக்கப்பட்ட சதாஹரித குழுமம், இலங்கையில் பெருந்தோட்டம், ஏற்றுமதி மற்றும் முதலீட்டுத் துறையில் முன்னணி நிறுவனமாக தேசிய பொருளாதாரத்தில் ஒரு முக்கிய சாதனை இலக்கினை எட்டியுள்ளது.

# ஆண்டின் சிறந்த வர்த்தகநாமமாக Super King Detergent நிறுவனம் தெரிவு

கிருமிநீக்கி மற்றும் துப்புரவாக்கிகள் உற்பத்தியிலும் விற்பனையிலும் வளர்ந்துவரும் நிறுவனமான Super King Detergent நிறுவனம் Lanka Business Awards (LBA) விருது வழங்கும் விழாவில் சிறிய மற்றும் மத்திய அளவிலான பிரிவில் ஆண்டின் சிறந்த வர்த்தகநாமம் என்ற உயரிய விருதை வென்றுள்ளது.

Business World International Organization (BWIO) ஏற்பாடு செய்த LBA விருது விழா கொழும்பு கிராண்ட் ஓரியன்டல் ஹோட்டலில் அண்மையில் வெகு விமரிசையாக நடைபெற்றது. அதன்போது நிறுவனத்தின் அதிபர் இராமசாமி சிவசங்கர் தமக்கான விருதை பெற்றுக்கொண்டார்.



# வடக்கு மாகாணத்தில் தொழில் கண்காட்சி

## நாளை வவுனியாவில் ,18 யாழில்




SLASSCOM இன் பிராந்திய அபிவிருத்தி மன்றம் முன்னின்று நடத்தும் இலங்கை மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களுக்கான (SLASSCOM) நாட்காட்டியின் முக்கிய நிகழ்வான IT/ BPM தொழில் கண்காட்சி இந்த ஆண்டு இலங்கையின் வடக்கு மாகாணத்தில் மீண்டும் நடைபெறவுள்ளது.

IT/BPM வாரத்தின் முக்கிய நோக்கம், நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தொழில்துறைக்கான விழிப்புணர்வை மற்றும் திறனை உருவாக்குவதுடன் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதுமாகும். IT/BPM தொழில் கண்காட்சியின் போது இந்த ஆண்டின் முக்கிய செயல்பாடுகள், நிகழ்வில் சேரவுள்ள நாட்டிலுள்ள 20இற்கும் மேற்பட்ட முன்னணி IT/BPM நிறுவனங்களிலுள்ள இறுதியாண்டு மாணவர்களுக்கான வேலைகளைப் பாதுகாப்பதை மையமாகக் கொண்டமைந்துள்ளது. Wiley Global Technology, CodeGen International Fortude, VitalHub, BCS Technology, SimCentric, CIMA, 99X, ஆகியவை ஏற்கனவே இத்திட்டத்தில் இணைந்துள்ள சில நிறுவனங்களாகும். வடமாகாணத்தில் உள்ள அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களே இந்நிகழ்வின் பிரதானமானவர்கள்.

இவ்விழா இரு இடங்களில் நடைபெறவிருக்கின்றது. நவம்பர் 17ஆம் திகதி வவுனியா பல்கலைக்கழகத்திலும், பின்னர் 18ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இடம்பெறவுள்ளது. IT/ BPM தொழில் கண்காட்சியானது SLASSOM இன் முக்கிய பிராந்திய நிறுவனங்களில் ஒன்றான Northern Chamber of IT (NCIT) உடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நிகழ்ச்சி நிரலானது, IT/ BPM துறையிலுள்ள பல்வேறு தொழில் வாய்ப்புகள் மற்றும் குறித்த இளங்கலைப் பட்டதாரிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், வட மாகாணத்தில் நடைபெறவிருக்கும் மிகப் பெரிய தொழில் கண்காட்சிக்கான மாதிரி நேர்காணல்கள் மற்றும் சுயவிபர சேகரிப்புடன் ஒரு தளத்தை உருவாக்க முயல்கிறது. தயாராக இருக்கும் மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளுக்கு எதிர்கால வாழ்க்கைப் பாதைகளை வரையறுப்பதற்காக, முன்னணி மற்றும் மூத்த தொழில் வல்லுநர்களுடன் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படும். தொழில்நுட்பத்தில் பெண்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க SLASSCOM பாடுபடுவதால் IT/ BPM துறையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பது IT/ BPM வாரத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

வடக்கு IT/ BPM தொழில் கண்காட்சியானது, சில சரியான நேரத்தில் பாடங்களில் அமர்வுகளை நடத்தும், இது தொழில் வல்லுநர்களுக்குத் தேவையான சில முக்கியமான மென்மையான திறன்கள் உட்பட தற்போதைய மற்றும் எதிர்கால போக்குகள் என்பவற்றையும் உள்ளடக்கும். உந்துதல் மற்றும் உத்வேகத்திற்கான வழிமுறையாக, இப்பகுதியைச் சேர்ந்த தொழில் வல்லுநர்கள் மற்றும் Start - Upஉளின் வெற்றிக் கதைகளையும் இந்தத் திட்டம் பகிர்ந்து கொள்ளும்.

SLASSCOMஇன் பிராந்திய அபிவிருத்தி மன்றத் தலைவர் ஜெஹான் பெரேரா நடைபெறவிருக்கும் IT/ BPM தொழில் கண்காட்சி குறித்து கருத்துத் தெரிவிக்கையில், "வடமாகாணத்தில் IT/ BPM தொழில் கண்காட்சியை மீண்டும் கொண்டுவருவதில் நாங்கள் மிகவும் பெருமையடைகின்றோம். பகிரப்படும் அறிவு மற்றும் எங்கள் பங்கேற்பாளர்களுக்கு, நாங்கள் வழங்கும் வாய்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் இது இன்னும் சிறந்ததாக இருக்கும் என்று நாங்கள் உறுதியளிக்க முடியும். 1000 IT/ BPM தொடக்கங்கள் மற்றும் 200,000 க்கும் மேற்பட்ட திறமையான நிபுணர்களை உருவாக்குவதன் மூலம் 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டுவதற்கான எங்கள் இலக்கின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை அதிகரிக்க உதவும் ஒரு வழியாக SLASSCOMஇல் உள்ள IT/ BPM தொழிற்துறையின் வளர்ச்சி மிகவும் முக்கியமானது. இந்த IT/ BPM தொழில் கண்காட்சியை எங்கள் பங்கேற்பாளர்களுக்கு ஒரு முக்கிய நிகழ்வாக மாற்றுவோம் என்றும் அவர்களுக்கு ஒரு மாற்றமான அனுபவத்தை வழங்குவோம் என்றும் நாங்கள் நம்புகின்றோம்" - என்றார்.

# நெஸ்லே லங்கா நிறுவனம் SOS Children's Villages Sri Lanka அமைப்புடன் கைகோர்த்துள்ளது




நெஸ்லே லங்கா நிறுவனம், நாடு முழுவதுமுள்ள ஐந்து SOS Children's Villagesகளுக்கு உதவிகளை வழங்குவதற்காக அவ்வமைப்புடன் புரிந்துணர்வு உடன்படிக்கை யொன்றில் கையெழுத்திட்டது.

அநுராதபுரம், காலி, யாழ்ப்பாணம், மொனராகலை மற்றும் நுவரெலியா ஆகிய பகுதிகளிலுள்ள 600இற்கும் மேற்பட்ட சிறுவர்களின் வாழ்வை எட்டி, 'நல்லுணவு, நல்வாழ்வு' நிறுவனத்தின் பங்களிப்பானது, இந்த சவால்மிக்க காலகட்டத்தின்போது அவர்களை வளப்படுத்த உதவும் வகையில், ஆறு மாத காலத்திற்கு அவர்களின் உணவு மற்றும் போசாக்குத் தேவைகளைப் பூர்த்திசெய்ய வழிவகுத்துள்ளது.

# Tantalize 2022 இலங்கையின் பல்கலைக்கழக திறமைக்கான தேடல்




கொழும்பிலுள்ள ஆசிய பசுபிக் இன்ஸ்டிடியூட் ஒவ் இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி (APIIT) நிறுவனத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட, இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கிடையேயான மிகப்பெரிய திறமை தேடல்களில் ஒன்றாக டான்டலைஸ் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட உணர்வாக மாறியுள்ளது.

இலுமினேட், பிளேஸ் மற்றும் இலங்கையின் பொழுதுபோக்குத்துறையில் குறிப்பிடத்தக்க கலைஞர்கள் போன்ற அற்புதமான இளம் திறமைகளை உருவாக்கும் ஒரு தளமாக இது பல ஆண்டுகளாக அங்கீகரிக்கப் பட்டது. கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக 2 வருட இடைவெளிக்குப் பிறகு, டான்டலைஸ் மீண்டும் 12ஆவது ஆண்டில் மிகவும் சிறப்பான முறையில் நடத்தப்படும்.

இறுதிச்சுற்றுக்கு அனுப்பப்படும் சிறந்த திறமையாளர்களைத் தேடுவதற்கான ஆடிஷன் சுற்றுகள் ஒக்டோபர் 08, 15 2022 திகதிகளில் நிறைவடைந்தன. பல்வேறு பிரிவுகளின் இறுதிப் போட்டியாளர்களுக்கான பொழுதுபோக்குத் துறையின் மரியாதைக்குரிய கலைஞர்களிடமிருந்து நிபுணர் பயிற்சி 05 நவம்பர் 2022 அன்று ஒரு பட்டறை மூலம் நிறைவேற்றப்பட்டது.

2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் திகதி நெலும் பொகுன மஹிந்த ராஜபக்ஷ திரையரங்கில் மாலை 6.30 மணிமுதல் இலங்கையின் 8 புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களின் பாட்டு, நடனம், இசைக்குழுக்கள் மற்றும் வாத்தியக் கருவிகள் என நான்கு பிரிவுகளில் 14 இறுதிப் போட்டியாளர்களுடன் இறுதிப்போட்டி நடைபெறவுள்ளது. 1200இற்கும் அதிகமான பார்வையாளர்களை ஈர்க்கும் இலங்கையின் டாடி, நியூஸ், வஸ்தி மற்றும் தலைசிறந்த கலைஞர்களின் முன்னிலையில் நடத்தப்படும்.

இலங்கை முழுவதிலும் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் சரியான நேரத்தில், சரியான முறையில் மற்றும் சிறந்த கவனிப்பை வழங்குவதற்காக லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் இருதய மற்றும் ஆபத்தான சிகிச்சையின் கட்டுமானத்தை விரைவுபடுத்துவதற்காக, நிகழ்வின் அனைத்து நடவடிக்கைகளும் லிட்டில் ஹார்ட்ஸ் அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கப்படும்.

# மட்டக்களப்பிலிருந்து தொழுநோயை முற்றாக ஒழிப்பதற்கு நடவடிக்கை

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குணசிங்கம் சுகுணன்







(கல்லடி நிருபர்)

இலங்கையிலேயே மக்கள் தொகை விகிதாசாரத்தில் அதிகூடிய அளவில் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் மட்டக்களப்பில் காணப்படுகின்ற தொழுநோயை மட்டக்களப்பு மாவட்டத்தில் முற்றுமுழுதாகக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தாம் எடுத்துவருவதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் தேசிய தொழுநோய்த் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து திட்டமிட்டு, இரு வாரங்களுக்கு முன்னர் அவர்களை கொழும்பிலிருந்து அழைத்துவந்து, அபாய நிலையை தெளிவுபடுத்தியிருந்தோம்.

இதளடிப்படையில் கடந்த சில தினங்களாக பயிற்சியளிக்கப்பட்ட ஏறத்தாழ 400 உத்தியோகத்தர்கள், பயிற்சித் தாதியர்கள் மற்றும் பயிற்சி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எனப் பலரை இணைத்துக்கொண்டு, அபாயம் நிறைந்த ஐந்து பிராந்திய சுகாதாரப் பிரிவுகளில் றிங் சேர்வி எனப்படும் முறை மூலம் வீடு வீடாகச் சென்று அனைவரையும் பரிசோதித்திருந்தோம்.

இதன்போது 3,800 வீடுகளில் வசிக்கின்ற 15,000 பொதுமக்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களில் 615 பேர் தோல் வைத்திய நிபுணர்களின் உதவியோடு மேலதிக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பொதுமக்கள் தோலில் தோன்றும் தேமல் போன்ற அழற்சி நிலை காணப்படின் காலந்தாழ்த்தாது, உடனடியாக தோல் வைத்திய நிபுணர்களிடம் சென்று பரிசோதித்து உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் மேலும் கேட்டுள்ளார்.

# கோறளை மத்தி பிரதேச செயலகத்தில் பசளை, நாற்று வகைகள் வழங்கிவைப்பு



(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் சேதனப்பசளை மற்றும் நாற்று வகைகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (14) இடம்பெற்றது.

ரம்யலங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் தியாவட்டவான் கிராமசேவை பிரிவிலுள்ள 100 பயனாளிகளுக்கு பசளைகளும், நாற்று வகைகளும் வழங்கப்பட்டன.

பிரதேச செயலாளர் எஸ்.எச்.எம். முஸம்மில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ரம்ய லங்கா நிறுவனத்தின் பிரதிநிதி அஷ்ஷெய்க் எம்.முஸ்தபா (மொழி பெயர்ப்பாளர்), 210 சி, கிராம சேவைப் பிரிவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், மயிலங்கரச்சை பௌத்த விகாரையின் விகாராதிபதி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு பயிர் விதைகள் மற்றும் சேதனப்பசளைகளையும் வழங்கினர்.



கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# 120 மில்லியனை தேசிய விளையாட்டு நிதியத்துக்கு வழங்கும் இலங்கை கிரிக்கெட் சபை


கடந்த ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணியின் இலங்கை சுற்றுப்பயணத்தின்போது போட்டி டிக்கெட் விற்பனை மூலம் கிடைத்த ரூ. 120 மில்லியன் பணத்தை தேசிய விளையாட்டு நிதியத்திற்கு வழங்க இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் இலங்கை விஜயத்தின்போது இலங்கை கிரிக்கெட் சபை விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய இந்த உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நாட்டின் அனைத்து விளையாட்டுகளையும் அபிவிருத்தி செய்கின்ற திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. முன்னதாக 100 மில்லியன் ரூபா நிதியை தேசிய விளையாட்டு நிதியத்திற்கு வழங்கியிருந்தது. அத்துடன், கடந்த ஓகஸ்ட் மாதம் இங்கிலாந்தில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டு விழாவில் பங்கேற்ற இலங்கை அணிக்கு 22.5 மில்லியன் ரூபாவை இலங்கை கிரிக்கெட் சபை நிதி உதவியாக வழங்கியது.

அத்துடன், சிங்கப்பூரில் அண்மையில் நடைபெற்ற ஆசிய வலைப்பந்து சம்பியன்ஷிப் போட்டியில் வெற்றிபெற்ற இலங்கை அணி வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு இலங்கை கிரிக்கெட் சபை தலா 2 மில்லியன் ரூபா வீதம் 36 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



வரவு-செலவுத் திட்டத்தில பாதுகாப்புக்கு மட்டும் 41 ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கி இருக்காரு எலுவா?

சண்ட இல்லாத காலத்தில வங்குறோத்து நாட்டில இத்தன கோடிக் காச ஒதுக்கி யாரோ ட்சண்ட புடிக்கிறதிட்னமோ ஒருவேள சீனாவுக்கு எதிராக போர் தொடுக்க நரி மாமா ஆயத்தப்படுத்திறாரோ.. சனத்துக்கு திண்டுக்க வழி இல்ல அதுக்குள பாதுகாப்புக்கு நிதி..!

# 'உள்ளக்கிடங்கு' சிறுகதை நூல் வெளியீடும் அறிமுகமும்




(கிண்ணியா நிருபர்)

தொல்புரம் கிழக்கு சுழிபுரத்தைச் சேர்ந்த மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இரண்டாம் ஆண்டில் பயிலும் மாணவியான ஆர்த்திகா சுவேந்திரனின் 'உள்ளக்கிடங்கு' சிறுகதை தொகுதியானது, திருகோணமலை 'அன்பின் பாதையின் எண்ணம்போல் வாழ்க்கை' கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் இலட்சுமி பிரசுரத்துடன் இணைந்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் (20) வெளியீடு மற்றும் அறிமுகமானது கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வானது 'எண்ணம்போல் வாழ்க்கை' கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக. தீபகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளதுடன், இந்நிகழ்விற்கு முதன்மை அழைப்பாளராக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் கலந்து சிறப்பிப்பதோடு, சிறப்பு அழைப்பாளர்களாக கவிஞர் மூதூர் முகைதீன் மற்றும் சட்டத்தரணி செல்வி ஐஸ்வர்யா சிவகுமாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்விற்கு எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலை இலக்கிய ஆர்வலர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# கடற்கரை உதைபந்து சுற்றுப்போட்டியில் மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் சம்பியன்







(நூருல் ஹுதா, எம்.என்.எம்.அப்ராஸ்)

மருதமுனை வீச் யங்கர்ஸ் அமைப்பின் ஏற்பாட்டில் அம்பாறையின் முக்கிய பல கழகங்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற டாக்டர் சிராஸ் மீராசாஹிப் வெற்றிக்கிண்ண கடற்கரை உதைபந்து சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் இரவு கல்முனை மாநகர சபை உறுப்பினரும் சுற்றுப்போட்டி ஏற்பாட்டுக் குழுவின் தலைவருமான ஏ.ஆர்.ஏ.அமீர் தலைமையில் இடம்பெற்றது.

மருதமுனை மருதம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் மோதிய நேற்றைய இறுதி ஆட்டத்தில் 2-1 என்ற பெனால்டி உதை மூலம் மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியனானது. இந்தப் போட்டிகளில் கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வரும், மெற்றோபொலிட்டன் கல்லூரி தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப், கிழக்கின் கேடயம் பிரதானியும், அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினரும், அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவருமான எஸ்.எம்.சபீஸ் ஆகியோர் அதிதிகளாக கலந்துகொண்டார்.

மேலும், அம்பாறை மாவட்ட உதைபந்து லீக் தலைவர் வை.கே. ரஹ்மான், பொதுச் செயலாளர் எம்.எச்.எம்.அப்துல் மனாப், பொருளாளர் எஸ்.முஹம்மட் கான், லீக்கின் பிரதித் தலைவரும் மாவட்ட நடுவர் குழு தவிசாளருமான எம்.பீ.எம்.றஸீட், லீக்கின் பிரதித் தலைவரும் மேன்முறையீட்டுச் சபை தவிசாளருமான நியாஸ் எம்.அப்பாஸ், ரோஷன் லங்கா நிறுவன உரிமையாளர் முஹம்மட் ரொஷான், ஐ.டி.க்கியூ லெப் நிறுவனப் பணிப்பாளர் சூர் ஆதம், கிழக்கின் கேடயம் பொதுச் செயலாளர் யூ.எல்.என்.ஹுதா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இச்சுற்றுப்போட்டியின் மூன்றாம் இடத்தை மருதமுனை கிரீன் மெக்ஸ் விளையாட்டுக் கழகம் தனதாக்கிக்கொண்டது. வெற்றியீட்டிய வீரர்களுக்கு பதக்கம் அணிவிக்கப்பட்டதுடன், கழகங்களுக்கு வெற்றிக்கேடயமும் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

# கட்டாரில் உலகக்கிண்ண கண்காட்சி



(ரமணி)

உலகக்கிண்ணப் போட்டிகள் தொடர்பான கண்காட்சி, கட்டாரில் நடைபெறவுள்ளது. பராகுவே கலைஞரான லில்லி கேன்டெரோவின் எண்ணத்தில் உருவான கலைப் படைப்புகள் உலகெங்கும் பிரசித்தமானவை.

8 மைதானங்கள், 8 சாம்பியன்கள், 1 கனவு - கட்டார் 2022 எனும் கருப்பொருளிலான கண்காட்சியில் காலணி, பந்து, கேன் வாஸ்கள் மற்றும் 3டி கட்டமைப்புகள் என மொத்தம் 25 படைப்புகளை நாங்கள் காட்சிப்படுத்தப் போகிறோம் என்று 29 வயதான கேன்டெரோ கூறினார்.

எண் 8 என்ற கருத்தை மையமாகக்கொண்டு எட்டு நாடுகள் மட்டுமே வென்ற உலகக்கிண்ண வரலாற்றை முன்னிலைப்படுத்தும் பணியை நோக்கமாகக்கொண்டுள்ளது. பிறேஸில் ஐந்து முறையும், இத்தாலி, ஜேர்மனி ஆகியன நான்கு முறையும், உருகுவே, ஆர்ஜென்ரீனா, பிரான்ஸ் ஆகியன இரு முறையும் இங்கிலாந்து, ஸ்பெயின் ஆகியன தலா ஒரு முறையும் சம்பியனாகியுள்ளன.

கட்டாரிலுள்ள பராகுவே தூதரகத்தின் ஆதரவுடன் கட்டார் தலைநகரிலுள்ள கட்டார் கலாசார கிராமத்துடன் இணைந்து உதைபந்தாட்டம், உலகக்கிண்ணம், வெவ்வேறு கலாசாரங்களால் ஈர்க்கப்பட்ட கண்காட்சி நவம்பர் 18 அன்று டோஹாவில் போட்டி தொடங்குவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு திறக்கப்படும்.

கையால் வர்ணம் பூசப்பட்ட பந்துகள் நிகழ்ச்சியின் மையத்தில் இருக்கும்போது அலங்கரிக்கப்பட்ட காலணிகள் கட்டாரிலுள்ள உலகக்கிண்ண மைதானங்களின் பிரதிநிதித்துவங்களில் 3டி காட்சியில் காண்பிக்கப்படும். கட்டார் எமிர் ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானி, குதிரை, பருந்து, மத்திய கிழக்கு, லத்தீன் - அமெரிக்க பராகுவேய கலாசாரம் தொடர்பான பிற சின்னங்களின் படங்களும் வைக்கப்படவுள்ளன.



கேன்டெரோவின் திறமை 2018ஆம் ஆண்டு மீண்டும் பிரபலமடைந்தது. ஒரு ஜோடி கால்பந்து ஷூக்கள் அவரது கலையால் அலங்கரிக்கப்பட்டு லியோனல் மெஸ்ஸி மற்றும் அவரது குடும்பத்தினரின் கறுப்பு, வெள்ளை படங்கள் பிரபலமாகின. ஆர்ஜென்ரீனா கப்டன் காலணிகளுடன் போஸ் கொடுக்கும் படம் சமூக ஊடகங்களில் பரவலாகப் பகிரப்பட்ட பிறகு முன்னாள் பிறேஸில் நட்சத்திரம் றொனால்டினோ உட்பட அவரது சொந்த பராகுவேக்கு வெளியே உள்ள தொழில்முறை வீரர்களின் வடிவமைப்புகளுக்கான கோரிக்கைகளுடன் கேன்டெரோவின் வாழ்க்கை உயர்ந்தது.

2005ஆம் ஆண்டில் உலகின் சிறந்த கால்பந்து வீரருக்கான பலோன் டிஓர் விருதை வென்ற பிறகு றொனால்டினோவின் தாயார் கொடுத்த முத்தத்தை விளக்குவதற்காக அவர் தனிப்பட்ட முறையில் றொனால்டினோவுக்கு காலணிகளை பரிசாக வழங்கினார்.

அடுத்த உலகக்கிண்ணப் போட்டி அமெரிக்கா, மெக்சிக்கோ, கனடாவில் நடைபெறவுள்ளதால் அமெரிக்காவை மையமாகக்கொண்ட திட்டங்களில் பணிபுரிய - மற்ற பிராந்தியங்கள் மற்றும் நாடுகளுடன் பணிபுரிய விரிவடைந்து தொடர்ந்து வளர விரும்புகிறேன் என்று கேனெட்ரோ கூறினார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## இன்னும் 4 நாட்கள்




# பாடசாலை வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் 19 வயதுக்குட்பட்ட பிரிவில் குருநாகல் பாலிகா சம்பியன்

கல்வி அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை பாடசாலைகள் வலைப்பந்தாட்ட சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்ற இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரில் 19 வயதுக்குட்பட்ட பிரிவில் குருநாகல் பாலிகா வித்தியாலயம் சம்பியனானது.

Nestlé MILO

கடந்த வெள்ளிக்கிழமை வென்னப்புவ அல்பர்ட் எவ். பீரிஸ் மைதானத்தில் ஆரம்பமான குறித்த சுற்றுத்தொடரின் இறுதிநாள் நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றக. 13, 15, 17 மற்றும் 19 வயதுக்குட்பட்ட நான்கு வயதுப் பிரிவுகளில் ஏ மற்றும் பி என இரண்டு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் 19 வயதுக்குட்பட்ட பிரிவின் இறுதிப் போட்டியில் குருநாகல் பாலிகா வித்தியாலயத்தை எதிர்த்து களுத்துறை பாலிகா வித்தியாலயம் களமிறங்கியது.




இதில் 27 – 13 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றியீட்டி குருநாகல் பாலிகா வித்தியாலயம் சம்பியனானது. குறித்த போட்டிகளுக்கு நெஸ்லே மைலோ 29ஆவது ஆண்டாக அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை சிறையில் இரத்த தானம்

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை சிறைச்சாலையும் சிறைக்கைதிகள் நலன்புரிச் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'உதிரம் கொடுத்து உயிரை பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளிலான இரத்த தான நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை (19) காலை 9.00 மணியளவில் திருகோணமலை சிறைச்சாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு திருகோணமலை சிறைச்சாலை அத்தியட்சகர் வசந்த குமார டெப் தலைமையில் நடைபெறவுள்ளதோடு திருகோணமலை நகரிலுள்ளோர் தாமாக முன்வந்து இரத்த தானம் வழங்க முடியும்.

இந்நிகழ்வில் திருகோணமலை சிறைக் கைதிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் லயன்ஸ் பாஸ்கரன் மற்றும் தயானந்த ஜயவீர, பிரதான ஜெயிலர் சம்பத் ஜயவர்தன, சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# விழிப்புணர்வு தேசிய போட்டியில் மட்டு. மலேரியா தடுப்பு இயக்கம் சாதனை




(மட்டக்களப்பு நிருபர்)

2022ஆம் ஆண்டு தேசிய ரீதியாக சுகாதார அமைச்சுடன் மலேரியா நோய்த் தடுப்பு இயக்கம் இணைந்து நடத்திய மலேரியா நோய்த் தடுப்பு விழிப்புணர்வு தொடர்பான போட்டியில் மட்டக்களப்பு மலேரியா நோய்த் தடுப்பு இயக்கம் சாதனை படைத்துள்ளது.

மலேரியா தொடர்பான விழிப்புணர்வு போட்டியில் (Youtube, Facebook) மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட மட்டக்களப்பு மலேரியா தடை இயக்கம் சார்பாக போட்டியிட்ட பட்டிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, Youtube video பிரிவில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தையும் மாகாண மட்டத்தில் Face book பிரிவில் கிரான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு முதலாம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளது.

நேற்றுமுன்தினம் (14) நாரஹேன்பிட்டி தேசிய இரத்த மாற்று சேவைகள் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வின்போது இவர்களுக்கான நினைவுச்சின்னங்களும் பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# எரிவாயு கசிவு; மீனவர் படுகாயம்!

(மீராவோடை நிருபர்)

எரிவாயு கசிவு காரணமாக மீனவர் ஒருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆழ்கடலுக்கு இயந்திரப் படகில் மீன்பிடிக்கச் சென்ற ஓட்டமாவடி - மீராவோடை பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவரே இவ்வாறு எரிகாயங்களுடன் நேற்று (15) வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இயந்திரப் படகிலிருந்த எரிவாயு சிலிண்டரில் உணவு சமைத்துக்கொண்டிருந்த போது எரிவாயு கசிவு ஏற்பட்டு மீனவர் மீது தீப்பற்றியதாக அவருடன் சென்ற மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த ஏனைய மீனவர்கள் தீ பற்றிய மீனவரை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிட்டங்கி தாம்போதி வற்றி இயல்புநிலைக்குத் திரும்பியது




(நற்பிட்டிமுனை நிருபர்)


கிட்டங்கி தாம்போதி நீர்ப்பிரவாகம் குறைந்ததால் இயல்புநிலை வழமைக்குத் திரும்பியுள்ளது.

நாவிதன்வெளிக்கான பிரயாணததில் விவசாயிகள், அரச ஊழியர்கள் சிரமமின்றி தமது தொழில்களை மேற்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

கல்முனை மாநகருக்கு வருவோரும் பொருட்களைக் கொள்வனவு செய்து செல்கின்றனர்.

முகத்துவாரம் இம்முறை திறக்கப்பட்டதாலேயே கிட்டங்கி தாம்போதி நீர்ப்பரவல் குறைவான தென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கும்புறுப்பிட்டிப் பகுதி கர்ப்பிணித் தாய்மாருக்கு போசாக்குப் பொதிகள்




(கந்தளாய் நிருபர்)


குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கான "ஆரோக்கியமான எதிர்கால சந்ததியினர்" எனும் தொனிப்பொருளின்கீழ் குச்சவெளி பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் போசாக்கு உணவுப் பொதி வழங்கும் திட்டத்தில் நேற்று முன்தினம் (14) கும்புறுப்பிட்டி வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக்கின் ஆலோசனையில் கும்புறுப்பிட்டி சுகாதார வைத்திய அலுவலகத்தில் வைத்து உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன..

இந்நிகழ்வில் கும்புறுப்பிட்டி வட்டார பிரதேச சபையின் உறுப்பினர் என்.ஜெயகாந்தன் பிரதேச சபையின் செயலாளர் திருமதி மாலினி அசோக்குமார், பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், அப்பகுதியின் கர்ப்பிணித் தாய்மார்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இப்போசாக்கு உணவுப் பொதி வழங்கும் திட்டம் தொடர்ச்சியாக பெரியகுளம் தொடக்கம் தென்னமரவாடி வரையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மாணவர் பங்கேற்புடன் மரநடுகை நிகழ்வு

(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை முள்ளிப்பொத்தானை தி/கிண்/பாத்திமா பாலிகா மகாவித்தியாலயத்தில் மரநடுகை நிகழ்வு நேற்று (15) இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு மாணவர்களின் பங்கேற்புடன் மரத்தை பாடசாலை வளாகத்தினுள் நட்டு வைத்தார். குறித்த பாடசாலை மாணவிகளால் அமோக வரவேற்பளிக்கப்பட்டதுடன், மர நடுகை நிகழ்வு இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து பாடசாலை மைதானத்தினுள்ளும் மரநடுகை இடம்பெற்றது.

இதில் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் மஹிந்த வனசிங்க, விளையாட்டு உத்தியோகத்தர் கே.எம்.ஹாரிஸ் மற்றும் பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பு மாநகர சபையின் வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வு






(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபையின் வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வுகள் நகர மண்டபத்தில் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்றது.

மாணவர்கள் மத்தியில் வாசிப்புத் திறனை விருத்திசெய்யும் முகமாக பல போட்டிகள் மாநகர சபையால் நடத்தப்பட்டு அதில் தெரிவான மாணவர்களுக்கு இதன்போது பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் அதிதிகளாக கிழக்கு மாகாண சபை முதலமைச்சின் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா, மாநகர ஆணையாளர் நா.மதிவண்ணன், பிரதி ஆணையாளர் உ.சிவராஜா, பிரதி முதல்வர் க.சத்தியசீலன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட மேலும் பலர் இதன்போது கலந்துகொண்டுள்ளனர்.




அக்கரைப்பற்று வலய ஒலுவில் அல்-ஹம்றா மகாவித்தியாலய மாணவர்களின் சீகிரியாவிற்கான ஒரு நாள் கல்விச் சுற்றுலா கடந்த சனிக்கிழமை (12) அதிபர் அஷ்-ஷெய்க் யு.கே.அப்துர் ரஹீம் தலைமையில் இடம்பெற்றபோது, பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் சீகிரியாவை பார்வையிடுவதையும் மாணவர்களுக்கு காசியப்பன் மன்னனின் வரலாறு தொடர்பாக ஆசிரியர் எம்.எஸ்.எம்.அன்வர் விளக்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் - எஸ்.அஷ்ரப் கான்)

# வாழைச்சேனை ஆயிஷாவில் பரிசளிப்பு நிகழ்வு




(மீராவோடை நிருபர்)




வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் (14) இடம்பெற்றது.

பாடசாலை மட்டத்தில் இடம்பெற்ற தேசிய வாசிப்பு மாத மற்றும் மீலாத் போட்டி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவிகளுக்குப் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு, இரு அமர்வுகளாக நடைபெற்றன.

இதில், வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வில் அதிதியாக எழுத்தாளரும் வாழைச்சேனை மத்தி பிரதேச செயலக உத்தியோகத்தருமான எஸ்.எச்.அறபாத் கலந்துகொண்டதுடன், மீலாத் விழா பரிசளிப்பு நிகழ்வில் வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை ஆசிரியர் ஏ.எம். இஸ்ஸத் நஹ்ஜி கலந்துகொண்டார்.

# மட்டு. வலயப் பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற பட்மின்ரன் சுற்றுப்போட்டி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்வி வலயத்தின் 100 நாள் செயற்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பட்மின்ரன் சுற்றுப்போட்டி மட்டக்களப்பு கள்ளியங்காடு BDBA உள்ளக அரங்கில் கடந்த 12 மற்றும் 13ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இச்சுற்றுப்போட்டி மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் வித்தியாலயத்தின் அதிபர் வீ.முருகதாஸ் தலைமையில் வித்தியாலயத்தின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் திருமதி கிறிஷாந்தினி குகேந்திரா மற்றும் உடற்கல்வி ஆசிரியர் திருமதி எம்.சங்கர் ஆகியோரது ஒழுங்கமைப்பில் நடத்தப்பட்டது.

கடந்த 12ஆம் திகதி போட்டித் தொடரின் ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்று மறுநாள் 13ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இறுதிநாள் பரிசளிப்பு நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.சுஜாத்தா குலேந்திரகுமார் கலந்து சிறப்பித்ததுடன், இந்நிகழ்விற்கு சிறப்பு அதிதிகளாக உதவிக் கல்விப் பணிப்பாளர்களும், கௌரவ அதிதிகளாக நிகழ்விற்கான அனுசரணை யாளர்களும் கலந்து சிறப்பித்ததுடன், வெற்றியீட்டிய மாணவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களும் சான்றிதழ்களும் அதிதிகளினால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ராஜீவ் காந்தி கொலை வழக்கு விவகாரம்

# சாந்தன், முருகன் உட்பட நால்வரை இலங்கைக்கு அனுப்ப ஏற்பாடு

## ‘நால்வரும் தம் குடிமகன்கள்’ என்பதை உறுதிசெய்யுமா இலங்கை அரசு?

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையாகி திருச்சி சிறப்பு முகாமிலுள்ள முருகன், சாந்தன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் உள்ளிட்ட நால்வரையும் இலங்கைக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலிருந்த நளினி, முருகன், சாந்தன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகிய 6 பேர் உச்சநீதிமன்ற உத்தரவுப்படி கடந்த 11ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். இவர்களில் நளினி, ரவிச்சந்திரன் ஆகிய இருவரைத் தவிர, ஏனைய 4 பேரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள். எனவே, அவர்கள் திருச்சி மத்திய சிறை வளாகத்திலுள்ள சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.




முகாமிலுள்ள நால்வரும் சில கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவதாக திங்கட்கிழமை தகவல் பரவியது. ஆதலால் உண்மை நிலைவரத்தை அறியவும், அவர்கள் 4 பேரின் குறைகளைக் கேட்கவும் மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப்குமார் சிறப்பு முகாமுக்கு சென்றார். முகாமிலுள்ள வசதிகளையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் பார்வையிட்ட ஆட்சியர், முருகன், சாந்தன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 4 பேரிடமும் குறைகளைக் கேட்டறிந்தார்.



இதுகுறித்து ஆட்சியர் ஜெயக்குமார் தெரிவிக்கையில்,

முகாமிலுள்ள நால்வரும் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் குறித்த குறைகளைத் தெரிவித்தனர். உடனடியாக அவற்றை முகாம் நிர்வாகம் செய்து கொடுத்துள்ளது. 4 பேரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவில்லை. ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய இருவரும் தங்களுக்கு காலை, மாலைநேரங்களில் நடைபயிற்சி செல்ல வசதியில்லை எனத் தெரிவித்தனர். ஏனெனில், முகாமிலுள்ள பிறருடன் இவர்கள் இல்லை. இந்த 4 பேருக்கும் தனியாக வசதிகள்செய்து தரப்பட்டுள்ளன. நடைபயிற்சிக்கான வசதி விரைவில் செய்துதரப்படும்.

வெளிநாட்டவர், இந்தியாவில் ஏதேனும் வழக்குகளில் கைதாகி பிணையிலோ அல்லது விடுதலையாகி சிறையிலிருந்து வெளியே வந்தாலோ அவர்கள் சிறப்பு முகாமில் தங்கவைக்கப்படுவது வழக்கம். முகாமுக்கு வந்தவுடன் அவர்களது விவரங்கள் அவரவர் நாட்டினருக்கு அனுப்பிவைக்கப்படும்.

இதேபோல், இந்த 4 பேரின் விவரங்களும் தற்போது இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 4 பேரும் தங்களது நாட்டின் குடிமகன்கள்தான் என்பதை இலங்கை உறுதிசெய்ய வேண்டும். அந்த நாட்டிலிருந்து மேலும் விவரங்கள் கோரப்பட்டாலோ, முகாம்வாசிகளை அனுப்புமாறு கோரினாலோ அதனடிப்படையில் அவர்களை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். நால்வரில் மூவர் இலங்கைக்குச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர். ஒருவர் மீது (முருகன்) மட்டும் வழக்கு நிலுவையிலுள்ளது. அந்த வழக்கு தொடர்பான நடைமுறைகளும், இலங்கையிலிருந்து கடிதம் வருவதற்கு முன்பதாக முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 10 நாட்களுக்குள் 4 பேரையும் இலங்கைக்கு அனுப்புவதற்கான அனுமதிக் கடிதங்கள் தயாராகும்.

முகாமிலுள்ள நால்வரையும் அவர்களது உறவினர்கள் மற்றும் இரத்த சொந்தங்கள் எப்போது வேண்டுமானாலும் சந்தித்துப் பேசலாம். முன்னதாக முகாம் பொறுப்பாளரிடம் அனுமதி பெறவேண்டும். கையடக்கத் தொலைபேசிகள், எலக்ட்ரோனிக் சாதனங்கள் போன்றவற்றை பயன்படுத்த அனுமதியில்லை. விரும்பினால், அவர்களே உணவு சமைத்து சாப்பிடலாம். இருப்பினும், 4 பேருக்கும் அவர்கள் கோரும் உணவு முகாமிலேயே தயாரித்து வழங்கப்படுகிறது - என்றார்.

**எழுவரின் விடுதலையை எதிர்த்து மத்திய அரசு மறுசீராய்வு மனு**

இந்நிலையில், இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலைசெய்யப்பட்ட பேரறிவாளன், நளினி உள்ளிட்ட எழுவரின் விடுதலையை எதிர்த்து, மத்திய அரசு சார்பில் மறுசீராய்வு மனு தாக்கல் செய்யலாமா என்பது குறித்து, பா.ஜ. ஆலோசித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

# திருச்சி சிறப்பு முகாமும் சிறைபோலவே உள்ளது

### கணவன் முருகனை சந்தித்த நளினியின் கண்ணீர்க் கதை



‘‘சிறப்பு முகாமும் சிறை போலவே உள்ளது. நால்வரையும் வைத்திருக்க வேண்டியதில்லை. விரைந்து அவரவர் விரும்பும் நாட்டுக்கு அனுப்ப மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்’’ - என திருச்சி சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள தனது கணவர் முருகனை திங்கட்கிழமை சந்தித்த நளினி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்,

‘‘முகாமில் உள்ளவர்களை எளிதாக சந்திக்க முடியவில்லை. முகாம் நிர்வாகத்துக்கும் இத்தகைய நடைமுறை புதிதாக இருந்ததால் காலையில் வந்து நடைமுறைகளை முடித்து 4 பேரையும் சந்திக்க நீண்டநேரமாகிவிட்டது. தற்போதுதான் சந்தித்துவிட்டு வருகிறோம். சிறப்பு முகாமும் சிறை போலவே உள்ளது. 4, 5 கதவுகளைக் கடந்துதான் தனியாக அடைக்கப்பட்டுள்ளனர். விடுதலை என அறிவித்துவிட்டு முகாமுக்கு கொண்டுவந்து சிறைபோன்ற சூழலில் அடைத்து வைத்திருந்ததால் அதிர்ச்சியிலிருந்தனர். தற்போது இயல்புநிலைக்கு வந்துவிட்டனர்.

இருப்பினும், சிறப்பு முகாமில் இந்த 4 பேரையும் வைத்திருக்க வேண்டியதில்லை. விரைந்து அவரவர் விரும்பும் நாட்டுக்கு அனுப்ப மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். இலங்கைத் தூதரகத்தினர் ஏற்கனவே ஜெயக்குமார், ரொபர்ட் பயஸை சந்தித்தபோது, இலங்கைக்கு வந்தால் வேலைவாய்ப்பு உள்ளிட்ட அனைத்தும் செய்து தருவதாகத் தெரிவித்தனர். இலங்கையில் தற்போது நெருக்கடி ஏற்பட்டு பலரும் அகதிகளாக வெளியேறி வருகின்றனர். எனவே, அவர்கள் இலங்கை செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. சாந்தன் மட்டுமே இலங்கை செல்ல விருப்பம் தெரிவித்துள்ளார். எனது கணவர் மீது எந்த வழக்கும் இல்லை. நானும், எனது கணவரும் லண்டன் சென்று மகளுடன் வசிக்க விரும்புகிறோம். எனது மகளைப் பார்த்து 16 ஆண்டுகளாகிவிட்டன.

அதற்கு முன்னதாக தூதரகம், வங்கிக் கணக்கு உள்ளிட்ட சில நடைமுறைகளை முடிக்க வேண்டும். மேலும், சில கோயில்களுக்கு சென்று சிறை காலத்தில் வேண்டிக்கொண்ட நேர்த்திக் கடன்களை வழங்க வேண்டும்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எங்கள் குடும்பத்தில் ஒருவர் குற்றத்தைச் செய்ததாக என் மீது சுமத்தப்பட்ட குற்றம் நீங்கினால்தான் எனது மனது சரியாகும். ராஜீவ் காந்தி கொலையில் தொடர்புடையவர்கள் யாரென்று எனக்குத் தெரியவில்லை. காட்டிக் கொடுக்கும் பழக்கம் இருந்திருந்தால் 32 ஆண்டுகள் சிறையில் இருந்திருக்கவேண்டிய அவசியமில்லை.

தமிழகம் எங்களுக்குப் பாதுகாப்பாகவே உள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து தேவையற்ற கஷ்டங்களை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காக சந்திக்கவில்லை. ராஜீவ் வழக்கில் தொடர்புடையதாக கூறப்பட்டு ஏற்கனவே வெளியிலுள்ள பலரால் சமூகத்துக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இப்போது, விடுதலையானவர்களாலும் எந்தப் பிரச்சினையும் இருக்காது. இருப்பினும், சிலர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். மேன்முறையீடு செய்வதாகவும் கூறுகின்றனர். சிறப்பு முகாமில் உள்ளவர்களை விரைந்து விரும்பும் நாட்டுக்கு அனுப்புவதற்கான முன்னெடுப்புகளில்தான் தற்போது கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அதிகபட்சம் 2 வாரங்களுக்குள் இத்தகைய நடைமுறைகள் முடிந்துவிடும் என எதிர்பார்க்கிறோம் - என்றார் அவர்.

## ஐயோ சாமி..!! நான் இலங்கைக்கு போகவே மாட்டன்



‘‘இலங்கைக்கு போகிற எண்ணம் உங்களுக்கு இருக்கிறதா?’’ என நளினியிடம் கேட்டபோது,

‘‘ஐயோ சாமி..!! நான் இலங்கைக்கு எல்லாம் போக மாட்டேன். அவரையும் நான் அங்கே அனுப்ப மாட்டேன். இனி அதை நான் மறந்துவிட வேண்டியதுதான். நாங்கள் இனி இலங்கைக்குப் போகும் வாய்ப்பே இல்லை’’ என பதிலளித்துள்ளார்.

### திருமண வரன் பார்க்கும் நிகழ்வு

## 230 பெண்களை மணமுடிக்க குவிந்த 14,000 மணமகன்கள்



கர்நாடகாவில் நடைபெற்ற திருமண வரன் பார்க்கும் நிகழ்வில், 230 பெண்களை வரன் பார்க்க 14,000 மணமகன்கள் குவிந்துள்ளனர். இதனால் விழா ஏற்பாட்டுக் குழுவினர் திக்குமுக்காடியுள்ளனர்.

கர்நாடகாவின் மண்டியா மாவட்டத்திலுள்ள ஆதிசுஞ்னகிரி மடத்தின் சார்பில் கல்யாண வரன் பார்க்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் சுமார் 230 பெண்கள், மணமகன் தேவை என பதிவுசெய்திருந்த நிலையில், நிகழ்ச்சி தொடங்கியதும் ஏராளமானோர் அங்கு கூடினர்.

அதிலும், 230 பெண்களை மணக்க 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் விருப்பம் தெரிவித்து, ஜாதகங்களுடன் விண்ணப்பித்தனர். இந்நிகழ்வு இணையத்தில் வைரலாகி வருகிறது.

## சயனைட்டை விட 6,000 மடங்கு கொடிய நச்சுத் தாவரம்



பிரிட்டனில் சயனைட்டை விட 6,000 மடங்கு அதிக நச்சுத்துத் தன்மைகொண்ட உலகின் கொடிய தாவரம் பூங்காவொன்றில் வளர்க்கப்பட்டு வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

‘ரிசினஸ் கம்யூனிஸ்’ என்று அழைக்கப்படும் இந்தத் தாவரம் ஆமணக்கு வகையைச் சேர்ந்தது. உலகின் மிக நச்சுத்தன்மை வாய்ந்த தாவரமாக கின்னஸ் புத்தகத்தில் பெயரிடப்பட்டது.

பிரித்தானியாவின் கொல்வின் விரிகுடாவிலுள்ள ‘குயின்ஸ் கார்டன்ஸ்’ பூங்காவில் ‘ரிசினஸ் கம்யூனிஸ்’ தாவரம் இருப்பதை பெண்மணி ஒருவர் பார்த்து செல்போனில் படம் பிடித்து, தனது கணவருக்கு அனுப்பியுள்ளார். அப்பெண்ணின் கணவர் அந்தத் தாவரத்தின் நச்சுத்தன்மையை கண்டு அதிர்ச்சியடைந்தார்.

இந்தத் தாவரங்களை கையுறைகளால் கையாள வேண்டும். ரிசினஸ் கம்யூனிஸ் தாவரத்தின் விதைகளின் நுகர்வு மிகவும் ஆபத்தானது என்று அவர் தெரிவித்துள்ளார்.

பின்பு, அவர் பூங்கா நிர்வாகத்தை தொடர்புகொண்டு அந்தத் தாவரத்தை அகற்றுமாறும், எச்சரிக்கைப் பலகைகளை நிறுவுமாறும் பரிந்துரைத்தார்.

## குடியுரிமை இருந்தால் இராணுவத்தில் வேலை

### கனடா அரசு அதிரடி



கனடாவில் நிரந்தர குடியுரிமை பெற்றவர்கள் இராணுவத்தில் சேரலாம் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

கனடாவில் இலங்கை, இந்தியா, சீனா, பாகிஸ்தான் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்கள் அதிகளவில் வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் அந்நாட்டின் நிரந்தர குடியுரிமை பெற்றவர்களாகவுள்ளனர்.

இந்நிலையில், நிரந்தர குடியுரிமை பெற்றவர்கள் கனடா இராணுவத்தில் சேரலாம் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. கனடா இராணுவத்தில் இடைவெளியாகவுள்ள ஆயிரக்கணக்கான இடங்களை நிரப்ப போதிய ஆட்கள் இல்லை என்பதைத் தொடர்ந்து இந்தாண்டு இறுதிக்குள் 5,900 வீரர்களை சேர்க்க அந்நாட்டு இராணுவம் முடிவெடுத்திருப்பதையொட்டி இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதன்படி, இராணுவத்தில் சேர 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். 16 வயதுக்குட்பட்டவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்களது பெற்றோர் சம்மதம் வேண்டும். 10 அல்லது 12ஆம் வகுப்பு கல்வித் தகுதி இருந்தால் போதுமானது. இந்த விதிகள் நிரந்தர குடியுரிமை பெற்றவர்களுக்கும் பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

SLASSCOM THE KNOWLEDGE AND INNOVATION CHAMBER
ISLAND OF INGENUITY KNOWLEDGE SOLUTIONS SRI LANKA
வடக்கு IT / BPM தொழில் கண்காட்சி 2022
யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகங்களில், 2022 நவம்பர் 17 மற்றும் 18ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற இருக்கின்றது
வவுனியா பதிவு லிங்க் https://bit.ly/VAVNUIYAUNI
யாழ் பதிவு லிங்க் https://bit.ly/JAFFNAUNI
நீங்கள் பின்வருவனவற்றை எதிர்பார்க்கலாம்
* நேரடி மற்றும் மாதிரி நேர்காணல்களுடன் சுயவிபரக்கோவை சேகரிப்பு
* இலங்கையின் 50க்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னணி தொழில் வல்லுநர்களுடன் திறந்த விவாதங்கள்
* IT/BPM தொழில் வல்லுநர்களாக ஆக தேவையான திறன்களைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்
இலவசமாக பதிவு செய்யுங்கள் | நீங்கள் விரும்பிய தொழிலை பெற்றிடுங்கள்
UNIVERSITY OF VAVUNIYA · REGIONAL PARTNER NCIT · UNIVERSITY OF JAFFNA
- உங்களின் சுயவிபரக்கோவையை கொண்டு வாருங்கள்
- முன்பாகவே பதிவு செய்யுங்கள்
- அனைத்து தகவல் மற்றும் அரசாங்க பல்கலைக்கழக மாணவர்கள் அழைக்கப்படுகின்றனர்
BCS · FORTUDE · Creative Software · vitalhub Innovations Lab · EYEPAX · CODEGEN · 99x · SIMCENTRIC · AICPA & CIMA · WILEY
DIGITAL AND PRINT MEDIA PARTNERS
தமிழன் · தமிழன்

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7